# அகதி

**AKATHY**
**(REFUGEE)**

காலாண்டிதழ்
Quarterly Magazine
**18**



**Akathy Publication**
*Portacabin*
*Knights Lane*
*Edmonton*
*London N9 0PD*
*Tel: 081 887 0644*


**30p**

## HOME OFFICE பார்வையில் இலங்கை ஏன் பாதுகாப்பான நாடு?

*- முக்கிய தகவல்கள் உள்ளே...............*

## ஆறாவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்யும் சன்றைஸ் தமிழ் ஒலிபரப்பு

கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் அவர்களுடன் ஒரு நேர்காணல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**30% DISCOUNT FOR ALL SERVICE PARTS**

* We have a massive range of garrage equipment and tools
* We stock components & Spares for all British, European & Japanese cars

# VEE KAY AUTOS

OPEN 7 DAYS A WEEK

## SERVICES

48, Belfast Road , London N16

**0181 806 1965**

## PARTS

76 Stamford Hill, London N 16

**0181 806 2294/5**

**M.O.T**
**While - You - Wait**

* We have everything from a clutch to a plug.
* We are one of the largest stockists of body panels

**SPEEDY DELIVERY**

தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறையுடன்
பணிபுரியும் அகதி சஞ்சிகையின் தொடர்ச்சியான
வெளியீட்டுக்கு எமது ஆதரவுகள்

Legal Aid

Legal Aid

# RAJA & CO

**SOLICITORS**
**ADMINISTRATORS OF OATHS**

295 Balham High Road,Tooting Bec,
London SW17 7BA

TEL : 0181 682 2585 FAX : 0181 682 2575

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PARAM & CO
## SOLICITORS

**Civil Litigation *Commercial Litigation *Immigration *Personal Injuries *Conveyancing *Entertainment Law*Residential & Commercial *Police Station Advice & Assistance *Accident Claims *Matrimonial matters *Welfare benefits & Social security matters*

**S. Paramalingam. BA, LLM**

Assistant Solicitors :
Miss R. Kulasegaram,
Mr. T. Thanarajasingam

**TEL : 0181 200 3500**
**FAX : 0181 200 1360**

**SEGARAM HOUSE, 221 EDGEWARE RD COLLINDALE, LONDON NW9 0SR**

**WITH BEST COMPLIMENTS FROM**

# YOGA & CO

## SOLICITORS

ADMINISTRATORS OF OATHS

T. YOGANANTHER

47 BOOTH ROAD, COLINDALE, LONDON NW9 5JS
TEL : 0181 205 0899 FAX: 0181 200 5797




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

## அகதியும் டோல்ப்பணமும், கொன்சவேட்டிவ் கட்சியின் எலக்சன் பிரச்சனை.

பிரித்தானியாவின் அரசியற் கட்சிகள் நிறம், இனம், சமயம், மொழி என்பனவற்றையோ அரிசி, பருப்பு, சீனி என்பனவற்றையோ எலக்சன் ஆயுதமாக முன் வைத்து மக்களின் வாக்குகளைப் பெறமுடியாது. ஏனெனில் அவர்கள் முதலாந் தர நாட்டு மக்கள் என்கிறார்கள்! நாகரீகமானவர்கள் என்கிறார்கள்! போதாக்குறைக்கு உலக நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை கண்காணித்து கண்டிக்கும் பொலிசார்களாக இருப்பதாகக் கூறிக்கொள்கின்றார்கள். கொன்சவேட்டிவ் கட்சியின் கடந்த பதினாறு வருட கால ஆட்சி பிரிட்டனை மூன்றாம் தர நாட்டு நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டதென எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இதற்கு வெவ்வேறு காரணங்களை அவர்கள் கூறினாலும் அகதியைப் பொறுத்தமட்டில் ஒரு உண்மையை உணரக்கூடியதாகவிருக்கின்றது. வெளிநாட்டவர்களையும் அவர்களின் பிச்சைக்காசையும் அடிப்படை வசதிகள் என்பவற்றையும் "எலக்சன் இஷ்யூவாக" வைத்து போட்டி போட வேண்டிய நிலைமைக்கு கொன்சவேட்டிவ் தள்ளப்பட்டுள்ளது என்பதை நினைக்கும்போது நாமும் அகதிகளாக மற்றுமொரு மூன்றாம் தர நாட்டிற்கு வந்துவிட்டோம் என எண்ணத் தோன்றுகின்றது. கொன்சவேட்டிவ் கட்சியின் மத்திய காரியாலய ஆராய்ச்சி அதிகாரி திரு அன்ரூ லேன்இலி அவர்களின் கண்டுபிடிப்பில் கொன்சவேட்டிவ் கட்சியின் 1992ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றிக்கு குடிவரவுப் பிரச்சனை முக்கிய காரணமாக அமைந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். அதே ஆண்டில் அக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் 1993ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தஞ்சம்கோருவோர் மேன்முறையீட்டு சட்டம் பற்றிய ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

With Best Compliments
from

RENGAN N. DEVARAJAN

Solicitors

Legal Aid

IMMIGRATION
CRIME/POLICE STATION ADVICE
WELFARE BENEFITS/HOUSING/LANDLORD & TENANT
MATRIMONIAL

LEGAL AID SERVICE

0181- 478 5797

EMERGENCY MOBILE : 0836 546429

FIRST FLOOR, 128 ILFORD LANE, ILFORD, ESSEX IG1 2LE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு இனவாத சட்டமூலம் எனவும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் எனவும், எதிர்க்கட்சிகளினாலும் பல்வேறு சமூக அமைப்புக்களினாலும் விமர்ச்சிக்கப்பட்டது. இருந்தாலும் கடந்த தேர்தலில் கொன்சவேட்டிவ் மூன்றாவது முறையாக பாராளுமன்றத்திற்கு பிரிட்டிஷ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டது. அடுத்த எலக்சன் 1997ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம் பெறவிருக்கின்றது. இபபோது புதிதாகக் கொண்டுவரப்படும் மற்றுமொரு தஞ்சம் கோருவோர் குடிவரவுச் சட்டவிதிகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்நாட்டில் அறிவிக்கப்பட்ட சட்ட விதிகளில் மிகவும் மோசமானது என பலவேறு கோணங்களிலும் வர்ணிக்கப்பட்டு வருகின்றது. தஞ்சம் என்ற பெயரைப் பாவித்து இலகுவாக நாட்டுக்குள் வரும் பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களை முற்றாக நாட்டிற்குள் வராமல் தடுத்துவிடுவதற்கு இச்சட்ட மூலத்தின் மூலம் வழிபிறக்கும். இவற்றிற்கும் மேலாக தற்போது அறிவிக்கப்பட்டள்ள டோல்ப்பணம் சம்பந்தமான பிரமாணங்கள் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி அளவில் பாராளுமன்றத்தின் அனுமதிக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப்பிரமாணங்கள் பற்றி கடந்த ஜூலை மாதம் உள்நாட்டு அலுவல் விவகாரச் செயலாளர் திரு மைக்கல் ஹவாட் கூறும்போது 87 **குடும்பத்தினர் தங்கள் நாடுகளுக்கு திரும்பிய பின்னரும் அவர்களின் பெயரில் தொடர்ந்து டோல்ப்பணம் எடுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் சுமார் ஒன்றரை மில்லியன் பவுண் பணம் சேமிக்கப்பட்டது. இது இந்நாட்டின் வரிகட்டுவோரின் பணமாகும். இது தொடர இன்னமும் நாம் அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.** இதைத் தொடர்ந்து கடந்த ஒக்டோபர் மாதம் டோல்ப்பண கொடுப்பனவுகளுக்கு பொறுப்பான செயலாளர் திரு பீற்றர் லில்லி தஞ்சம் கோருவோருக்கான டோல் உதவிபற்றியும் "வெட்டுக்கள்" பற்றியும் அறிவித்துள்ளார் . இப்பிரமாணங்கள் ஜனவரி 8ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். சுமார் பத்தாயிரம் பேர் தங்களது டோல்ப்பணத்தை உடனடியாக இழப்பர். **இதில் சுமார் 1500 பேர் வரை தமிழ் அகதிகளாக இருப்பார்கள்.** அடுத்த ஆண்டு முடிவதற்குள் சுமார் 50 ஆயிரம் பேர் டோல்ப்பணத்தை இழப்பர். அதில் ஏறத்தாழ 3,000 பேர் தமிழ் அகதிகள். இதனால் அரசு அடுத்த ஒருவருட காலத்துள் 200 மில்லியன் பவுண் பணத்தைச் சேமிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. **எது எவ்வாறாக இருந்தாலும் எதை எவர் இழந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம்."கொன்சவேட்டிவ் கட்சி பிரிட்டிஷ் மக்களின் வாக்குகளை மட்டும் இழக்காது."**

---

## WHAT HAVE I DONE FOR THE COMMUNITY and WHAT HAVE I DONE TO IT

A general look at the movement of refugees into and out of this country provides a very interesting picture. Although refugees have come into the country for a very long time it would be sufficient to confine our concern to the period after the Geneva Convention of 1951 and to those who are referred to as "political refugees"

In 1957 when the Russian military hardware rolled out onto the roads of Hungary many fled from that country into adjoining countries, some arrived in this country as well. They were welcomed. The government and the general population had a common attitude that could be summed up as "enemy's enemy is my friend" ie. those who opposed Russia would be our friends as Russia was our enemy. The Hungarians were well received and treated well. The numbers were small. Then as now the bulk of those who fled went to several other countries and only a few arrived here. These refugees were not asked to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

prove that they were individually or personally at risk of being persecuted. The situation in the country of origin of these refugees was adequately understood and were allowed or rather welcomed as refugees. The crises situation lasted only a short time.

A similar crises situation occurred in 1967 when the military might of the Russians swooped down on Alexander Dubcek's government in Czechoslovakia. Once again the same principle applied. Our enemy's enemy is our friend. Once again then as now many fled to adjoining countries but some arrived here as well but the number was relatively small.

A slightly different situation suddenly came about in the seventies when Ayotolla Khomeni overthrew the Shah of Iran. When the Shah "our friend" was in power a large number of Iranian students were attending universities and other institutions of education in the United Kingdom. When the changes occurred in Iran some of those who were here were reluctant to go back to their country. Some from Iran came here. The government and the general population accepted the refugees with a lot of sympathy. Once again the basic principle was enemy's enemy is our friend.

A different problem was created in the mid seventies when the United States of America decided to pull out of Vietnam. There was over whelming sympathy for the enemy's enemy and on top of it an insatiable urge to please the people who created the problem and were looking for a suitable solution. They were also the recipients of some sympathy, as they had lost the war of democracy. The Vietnamese fled in their thousands in boats. They landed in almost all the adjoining countries. They were the people now referred to as Boat People.

Even at that time the word "Refugee" had several unpleasant connotations. That was probably why they were not referred to as refugees but Boat People.

When the Boat People arrived in this country as "programmed Refugees" the government rolled out the red carpet and gave a rousing reception. There were dignitaries to receive them. Meticulous arrangements were made to make life easy for them. Millions of pounds were spent by the central and local governments to help the boat people to settle down in the U.K. The level of sympathy both in the government circles and the general public was very high has not waned very much. Every year the government makes available large sums of money for them to settle down.

In the mid eighties there was the first "flood" * of refugees from Sri Lanka. There was overwhelming sympathy both from the government and the general public for those who arrived from the country that faced civil commotion. The same principle applied The enemy's enemy is my friend. In this case the enemy was a government that was violating human rights and those who opposed it are our friends. Soon something went sour. The enemy became a friend and the friend became the enemy. The enemy who was seen as one who violated human rights was being described as a government that believed in the ballot and democracy. while those who were seen as the victims and received the sympathy and support were being seen as terrorists and militants and those who did not believe in the principles of democracy and the ballot but the bullet and bombs. Why did this change take place? How did it happen? Is that the whole story or are there other aspects to this?

It is our duty to do some soul searching. Ask ourselves what went wrong? Ask ourselves the question "Have I done anything that is considered wrong by our hosts? Have we advised others not to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

do such things? Have our hosts developed a bad or an unfavourable impression about us Sri Lankan political refugees in general? What has been our role in this? What can we do about it now? Who can help us?

Unless we Sri Lankans, everyone of us, not one percent of us, can establish an opinion among the local population that we are a community of HONEST, HARD WORKING, DILIGENT and UNSELFISH people; and that our associations are working towards the eradication of dishonesty and laziness, and that we need their sympathy it would be extremely difficult to receive the sympathy of our hosts. There is no purpose in holding public meetings, and demonstrations; in fact these will have the opposite effect on those who are in a position to make decisions.

It is difficult to imagine that the Home Office is not aware of the happenings in Sri Lanka. We have to investigate and find out exactly what brought about this change of heart of our hosts. This is not an easy or a simple task.

---

டோல்!
டோல்!
டோல்!

!?

## உங்கள் டோல்ப் பணம் பற்றிய கவலையா?

நீங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 11ம் திகதிக்கு முன்பு வந்து இறங்கு துறையில் அதாவது விமான நிலையத்தில் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்திருந்தால் அவ்விண்ணப்பம் இதுவரை விசாரிக்கப்படாமல் இருந்தால் அல்லது விசாரிக்கப்பட்டு முடிவுகள் தெரியப்படுத்தப்படாமல் இருந்தால் உங்கள் டோல்ப்பணம் தொடர்ந்து கிடைக்கும்.

சிலவேளை உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு எதிர்வரும் ஜனவரி 7ம் திகதிக்கு முன்பு தெரிவிக்கப்ட்டால் ஜனவரி 8ம் திகதியில் இருந்து உங்களுக்கு டோல்ப்பணம் கிடையாது.!

உங்கள் விண்ணப்பம் விசாரிக்கப்பட்டு ஜனவரி 8ம் திகதி வரையு நிராகரிக்கப்பட்ட முடிவு பெறாதிருந்தால் அம் முடிவைப் பெறும்வரை தொடர்ந்து டோல் கிடைக்கும்.!

உங்கள் விண்ணப்பம் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்பு நிராகரிக்கப்பட்டு அதற்கு எதிராக மேன்முறையீடு செய்து முடிபுகளை எதிர்பார்த்து இருப்பீர்களானால் அந்த அப்பீல் முடிபு வரும்வரை தொடர்ந்து டோல் கிடைக்கும்!

உங்கள்அப்பீல் முடிபு ஜனவரி 7ம் திகதிக்கு முன்பு நிராகரிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டால் ஜனவரி 8ம் திகதியிலிருந்து டோல்ப்பணம் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய உறவினர் அல்லது தெரிந்த உறவினர் ஒருவர் ஜனவரி எட்டாம் திகதிக்குப் பின்பு வந்து இறங்கி விமான நிலையத்தில் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்வாரானால் அவது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் வரை டோல்ப்பணம் வழங்கப்படும்.

வேறு வழியாகவோ அல்லது மாணவர் அனுமதி விசா அல்லது விடுமுறையில் அனுமதி விசா பெற்று நாட்டிற்குள் வந்த பின்பு தஞ்சம் கோரினால் ஜனவரி எட்டாம் திகதியிலிருந்து டோல்ப்பணம் கிடையாது!

ஒக்டோபர் மாதம் 11ஆம்திகதிக்கு பின்பு நாட்டிற்குள் வந்த பின்பு தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்தால் ஜனவரி 8ம் திகதியுடன் டோல் நிறுத்தப்படும்.

எப்படிப்பார்த்தாலும் ஜனவரி 8ம் திகதி வரை டோல்ப்பணம் எல்லோர்க்கும் தொடர்ந்து கிடைக்கும். நீங்கள் ஒரு அகதி அந்தஸ்தைப் பெற்றவரானாலும் அல்லது ELR விசாவில் இருப்பீர்களானால் உங்கள் டோல்ப்பணத்தில் இப்போது எந்தப் பிரச்சனையும் கிடையாது.

**ஆனால் எதிர்வரும் 95 96ஆம்ஆண்டில் பீற்றர் லில்லிக்கு அதாவது டோல் அமைச்சுக்கு ஒரு கோடி பவுண் வெட்டு. எனவே உங்கள் டோலில் எப்போது வெட்டு வருமோ தெரியாது. எனவே அகதியின் புத்திமதி வலிமையான காரணமின்றி டோலை நம்பி இருக்காதீர்கள்.**


# M.K.SRI & CO

**SOLICITORS**
**&**
**ADMINISTRATORS OF OATHS**

**93 Walton Avenue, South Harrow, Middx, HA2 8QY**

**TEL : 0181 423 2141 FAX/TEL : 0181 248 3383**

**WE SPECIALISE IN**

** Immigration * Crime * Conveyancing * Residential & Commercial*

** Police Station Advice & Assistance * Accident Claims * Matrimonial matters*

** Welfare benefits & Social security matters*

**LEGAL AID WORK UNDERTAKEN**

Legal Aid

PARTNERS

**N.KRISHNARAJAH**

**M.K.SRITHARAN**

Legal Aid


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Home office பார்வையில் இலங்கை ஓர் பாதுகாப்பான நாடு!

**-அகதி தரும் சில தகவல்கள்**

1. தனிப்பட்டவர் தகுதி அடிப்படையில் தஞ்சம் கோருவோர் விண்ணப்பங்கள் விசாரிக்கப்படும் போது இலங்கைத் தமிழர்களில் 98 வீதமானவை தகுதி அற்றவை.

2. 1994ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலான ஒரு வருட காலத்தில் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்த இலங்கையர் 2350.

3. 1995ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்த இலங்கையர் 1510.

4. பரிசீலனை செய்யப்பட்ட 1980 விண்ணப்பங்களில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டது 25பேர்களுக்கு மாத்திரமே. ஈ எல் ஆர் வழங்கப்பட்டது 185 ஆகும்.

5. 1770 பேரின் விண்ணப்பம் தஞ்சம்கோரும் தனிப்பட்டவர் தகுதிக்கு பொருத்தமில்லை என நிராகரிக்கப்பட்டுள்ளது.

6. இவ்வாறான முடிவுகள் எடுப்பதற்கு குறைந்தது சராசரி 18 மாதகாலம் ஒவ்வொரு விண் ணப்பத்திற்கும் தேவையாகின்றது. இதனால் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்டவர் தகுதி அடிப்படையில் தகுதி அற்றவர்கள் என்பதனால் இலங்கைப் பிரஜைகள் அகதி அந்தஸ் துக்கோர தகுதி அற்றவர்கள்.

7. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பகாரர்களில் 99 வீதமானோர் அதற்கு எதிரான மேன்முறையீடுகளைச் செய்திருக்கின்றனர். இவர்களுக்குரிய வாழ்க்கைப் பண உதவிகளைத் தாங்களாகவே தேடிக்கொள்ள வேண்டும். அல்லது உள்நாட்டு விவகார தீர்மானங்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யவிரும்புவோர் தங்கள் நாட்டிற்குச் சென்று இதனைச் செய்யவேண்டும். இந்நாட்டின் வரிகட்டுவோர் பணத்தில் இருந்து இவர்களுக்கு டோல்பண உதவி செய்வதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்.

8. இலங்கையில் கொழும்பும் மற்றைய தென் பகுதிகளும் தமிழர்கள் திரும்பிச் சென்று பாதுகாப்பாக வாழ்வதற்கு உரிய சூழல் உள்ளது என ஐக்கிய நாடுகளுக்கான அகதி ஆணையாளர் கூறுகின்றார்.

9. சுமார் மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொழும்பிலும் வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலும் வாழ்கின்றார்கள். இதனால் தமிழர்கள் அங்கு சென்று வாழமுடியும்.

10. மாதமொன்றிற்கு சராசரியாக 32 விமானங்கள் கொழும்பிற்குப் பறக்கின்றன. இதில் பிரயாணம் செய்பவர்களில் 75 வீதத்திற்கும் மேற்பட்ட பிரயாணிகள் தமிழர்கள். நீண்ட விடுமுறைகளைக் கொழும்பிலும் சிலர் வடகிழக்கு மாகாணங்களிலும் கழிக்கின்றார்கள். பிரிட்டனில் பிரஜாவுரிமை பெற்ற தமிழர்களுக்கும் நிரந்தர இருப்பிட அனுமதியைப் பெற்ற தமிழர்களுக்கும் கொழும்பு பாதுகாப்பு என்றால் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஏன் பாதுகாப்பாக இருக்க முடியாது.

11. தஞ்சம் கோரும் தமிழரில் பெரும்பான்மையானோர் நிரந்தர அனுமதி விசா கிடைத்த மறுகணமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு நோக்கிப் பறக்கின்றனர். இவர்களில் சிலர் அங்கு மணம் முடித்து தங்கள் ஜோடிகளை இங்கு அழைத்துவர அனுமதிவிசா கேட்டு கொழும்பு பிரிட்டிஷ் உயர்தானீகர் காரியாலயத்தில் நேரடியாக விண்ணப்பம் செய்கின்றார்கள். விண்ணப்பத்திற்கு ஆதாரமாக ஆடம்பரமாக நடைபெற்ற திருமணப் படங்களையும் அத்தாட்சியாகக் கொடுக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் கொழும்பு பாதுகாப்பு என்றால் ஏன் இங்கு நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு கொழும்பு பாதுகாப்பாக இருக்க முடியாது.

12. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பிரித்தானியாவுக்குள் வருவதற்குள் ஏராளமானோர் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையான தமிழர்கள் திரும்பவும் இலங்கைக்கு வருவதற்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும் தாங்கள் பாதுகாப்பாக வாழ்வதாகவும் தெரிவிக்கின்றார்கள். அதேபோல் தங்களது பிரயாணம் முடிந்த பின்பு கொழும்புக்குத் திரும்பிவிடுகின்றார்கள். இவர்களில் இலங்கை அரசிற்கு பணியாற்றுகின்ற தமிழர்கள், அரசியல்வாதிகள், வியாபாரிகள், மாணவர்கள் என்போர் அடங்குவர். அவர்களுக்கொல்லாம் இலங்கை பாதுகாப்பென்றால் இங்கு நிராகரிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஏன் பாதுகாப்பாக இருக்க முடியாது.

13. எல்லாவற்றிற்கும் மேலாக இங்கிருந்து கட்டாயமாக கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அகதிகள் எவரும் விமானநிலையத்திலோ அல்லது வெளியிலோ அரச அதிகாரிகளினால் துன்புறுத்தப்பட்டார்கள் என்ற தகவல்கள் இங்கில்லை. மாறாக அவர்கள் பாதுகாப்பாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.


KRISH RATNA & CO
SOLICITORS

Legal Aid

R.D Ratnasingam
N. Krishnarajah
Vijaya Ratnasingam(Associate)
for

Residential & Commercial Conveyancing, Criminal & Civil Litigation
Immigration and Matrimonial Matters, Police station Advice undertaken
( All 24 Hours service)

61 A/2, King street, southhall, middlesex
Tel : 0181 574 6303
Fax : 0181 574 1096




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரப்போகும் சமூக நல மாற்றங்களும் தஞ்சம் கோருவோர் நிலையும் பற்றி எட்மன்டன் தமிழ் அகதி நிலையத்தினர் தரும் தகவல்.

இந்நாட்டில் தஞ்சம் கோரி நிற்போரது சமூக பாதுகாப்பு நலக் கொடுப்பனவுகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய நகல் சட்டவிதிகளைப் பிரித்தானிய அரசு சென்ற மாதம் அறிவித்துள்ளது. நடைமுறைக்கு வரவிருக்கும் மாற்றங்கள் தஞ்சம் கோரி இருப்போரை பின்வரும் பாதிப்புக்களுக்குள்ளாக்கும்

-ஜனவரி 8ஆம் திகதி முதல் 10.000 வரையிலான விண்ணப்பதாரர்கள் தாம் பெறும் நலன்புரிக் கொடுப்பனவுகளான உணவுக்கான உதவிப்பணம், வாடகைப்பணம் போன்றவற்றையும் மேலும் பல உதவிகளையும் இழப்பார்கள். தொடர்ந்து ஆண்டு தோறும் 40,000 வரையிலானோர் இப்படி பாதிக்கப்படலாம்.

-தஞ்சம் கோரியிருப்போர்களை வீட்டுச் சொந்தக்காரர்கள் குடியிருப்பாளர்களாக ஏற்றுக்கொள்ள மறுக்கத் தொடங்கிவிட்டனர். மேலும் இவர்களை தர்மதாபனங்கள் குடியிருப்பாளர்களாக ஏற்றுக கொள்ளமாட்டார்கள். இதனால் இவர்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டி வரும்.

-பட்டினியால் வாடும் வீடு அற்ற அகதிகளுக்கு சேவை செய்யும் சமூக சேவையாளர், ஆசிரியர்கள், வைத்தியர்கள் இதனால் தங்கள் சேவைகளைச் சரிவரச் செய்ய முடியாது திண்டாடவேண்டிய நிலைமை ஏற்படும்.

-தற்சமயம் தஞ்சம் கோருவோருக்கு ஆறுமாதங்களுக்குப் பின்பே அரசு தொழில் புரிய அனுமதி வழங்குகிறது. இருந்தும் பலர் இச்சட்ட விதிகளினால் வேலைவாய்ப்பு பெறுவதில் சிரமத்துக்குள்ளாவார்கள்.

-கல்வி கற்பதற்கான சலுகைக்கட்டணம் நீக்கப்படுவதனால் பலர் ஆங்கிலமொழி வகுப்புக்களில் சேரமுடியாமற் போய் விடும்.

-இதனால் இவர்கள் வேலைவாய்ப்பற்று இருக்க வேண்டி நேரிடும்.

## தஞ்சம் கோருவோர் நிலைமையச் சீராக்க உங்கள் கடமைகளும் செயற்பாடுகளும்

நீங்கள் இப்புதிய விதிகளை பாராளுமன்றத்தில் விவாதிக்க உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தூண்ட வேண்டும். இதற்காக அவர்களுடன் உடனேயே தொடர்பு கொள்ளுங்கள். அவர்களைச் சமூக பாதுகாப்பு அரசு செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளும் படி கடித மூலம் உற்சாகப்படுத்துங்கள். அவர்கள் அளிக்கும் பதில்களையும் செயற்பாடுகளையும் எங்களுக்கு உடனுக்குடன் அறிவியுங்கள். உங்கள் கடிதங்களில் பின்வரும் குறிப்புக்களை உள்ளடக்கும்படி ஆலோசனை கூறுகின்றாம்.

-பிரித்தானியாவுக்கு வந்த பின்னரே தஞ்சம் கோருவோர் நலன்புரி உதவிகளுக்கான கொடுப்பனவுகளைக் கோரி விண்ணப்பிக்கின்றனர்.

இது பற்றிய விபரங்களை முன்னரே அறிந்திராத காரணத்தாலேயே இப்படிச் செய்கின்றனர். எனவே இவர்களுக்கான உதவிகளை இடை நிறுத்துவது நியாயமாகாது.

-குடிவரவு உத்தியோகத்தர்கள் பிழை விடுவதனாலேயே தஞ்சம் கோருவோரின் மேன்முறையீடுகள் வெற்றிபெறுகின்றன. எனவே மேன்முறைமீடு செய்யும் விண்ணப்பதாரர்களின் உதவிகளை நிறுத்தவது நியாயமாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பல விண்ணப்பதாரர்கள் உதவிக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவதால் வீட்டு வசதிகள் இன்றிப் பட்டினியால் வாடுவார்கள்.

-மேற்கூறிய பணிகளைத் திறம்படச் செய்ய பலருடைய உதவியையும் கோருங்கள். வணக்கத்தலங்களிலும் வேலைத்தலங்களிலும் மற்றும் பல குழுக்களுக்கும் தஞ்சம் கோருவோர் பரிதாப நிலையை எடுத்துக் கூறி அவர்களையும் உங்களுக்கு உதவச் செய்யுங்கள். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்ட தஞ்சம் கோருவோரை வீடுகளில் இருந்து வெளியேற்றாதவாறு தடைசெய்யுங்கள்.

-உங்கள் குரல் ஓங்கி ஒலிக்க எல்லோரும் ஒன்று சேர்ந்து உழையுங்கள்.

---


# தமிழ் அகதி நிலையம் ஏற்பாட்டில்

# மாபெரும் பொதுக்கூட்டம்

தமிழ் அகதிகளுடன் கடமை புரியும் அமைப்புக்கள் சட்டத்தரணிகள் தனிப்பட்டவர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவிக்கின்றார்கள்.

இடம்:

**EDMONTON GREEN TOWERS COMMUNITY CENTRE**
**7 PLEVNA ROAD, EDMONTON N9 0TL**

காலம்:

**26 - 11 - 95 (ஞாயிறு) பி.ப 3.00 மணி**

அருகிலுள்ள BR நிலையம்
**Edmonton Green Station**

பஸ் வண்டிகள்
279, 259, 149 ( From Sevensisters Under Ground)
144 ( From Turnpike Lane under Ground)

விபரங்களுக்கு:

**0181 887 0644**

**Tamil Refugee Centre, Edmonton, Portacabin**
**Knights Lane, Edmonton, N9 0PD**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நல்லது செய்யும்போது
தட்டிக்கொடுப்பதும்
தவறுகள் செய்யும்போது
கண்டிப்பதும்
ஒரு பத்திரிகையின் தர்மமாகும்."**
*-திரு எஸ். பரமலிங்கம் BA LLM*

*1980ஆம் ஆண்டு இலங்கைச் சட்டக்கல்லூரி பட்டதாரியாக வெளியேறிய திரு எஸ் பரமலிங்கம் அவர்கள், தந்தை செல்வாவின் மகன் திரு சந்திரகாசன் சட்டவல்லுனருடன் சேவையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெருமையாகக் கொள்வது மட்டுமல்லாது இன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் பல்வேறு வழக்குகளில் தனது இவ் அனுபவங்கள் பெரிதும் உதவுகின்றன எனக் குறிப்பிட்டார்.*
*இலங்கைப் பேராதனைப் பட்டதாரியாக வெளியேறிய திரு பரமலிங்கம் அவர்கள் சட்டத்துறையில் நிபுணத்துவம் பெறவேண்டுமென்ற தனதும் தந்தையினதும் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கைச் சட்டக்கல்லூரியின் பட்டதாரியாக வெளியேறினார். சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் போன்றவற்றில் மேலதிக சட்ட அறிவைப் பெறும்நோக்குடன் இங்கிலாந்திற்கு வருகை தந்த அவர் வட இங்கிலாந்தின் ஹல் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் உதவியுடன் சட்ட முதுமானிப் பட்டத்தை முடித்துக் கொண்டார்.*
*1986ஆம் ஆண்டளவில் தான் இந்த நாட்டிற்கு வந்த முக்கிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டவர் இலங்கையில் இடம்பெற்ற பிரச்சனைகள் காரணமாக அரசியல் தஞ்சம் கோரி இந்நாட்டிலே சட்டத் தொழிலை ஆரம்பித்தார். பிரித்தானியாவின் சேபீல்ஸ் நகரத்தின் சட்ட நிலையத்தில் முதன்முதலாக உதவிச்சட்டத்தரணியாக பதவியேற்ற திரு பரமலிங்கம் அவர்கள் சிறிது காலத்தின் பின்பு பிறெண்ட் உள்ளூராட்சியத்தின் குடிவரவு தொடர்பான சட்ட நிபுணராக கடமையாற்றினார். அன்றைய நாட்களில் வெளிநாட்டு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் இவ்வகையான பதவியொன்றைப் பெறுவது மிகவும் கடினமான காரியமாகும் இந்த நிலையத்தில் தான் பெற்ற அனுபவமும் திறமையும் தன்னம்பிக்கையும் தான் ஒரு தனியான நிறவனத்தை ஆரம்பிக்கக்கூடிய உறுதியைத் தனக்குத் தந்ததாக கூறும் சட்டத்தரணி திரு பரமலிங்கம் அவர்கள் அகதிக்கு அளித்த சிறப்புப் பேட்டியை இங்கு தருகின்றோம்.*

பரம் அன்ட் கம்பனி சட்டத்தரணிகள் ஸ்தாபனம் உதயமாவதற்கு சட்டத்தரணி திரு யோகநாதர் அவர்களே காரணம்.

நான் எனது சொந்த ஸ்தாபனத்தை தொடங்க முயற்சித்தபோது எனக்குத் தேவையான உதவிகளையும் வழிகளையும் தந்துதவியவர் சட்டத்தரணி திரு யோகநாதர் என்றே சொல்லவேண்டும். இன்றும் எனது வளர்ச்சியிலும் ஸ்திரத்திலும் அக்கறை கொண்டவர் . 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனத்திற்கு இன்றுவரை தனிப்பட்ட முறையிலும் தொழில் தீரியான முறையிலும் மிகவும் நெருங்கிய உறவை யோகா அன்ட் கொம்பனி சட்டத்தரணிகள் ஸ்தாபனத்துடன் வைத்திருக்கின்றேன். புதிய தாபனங்களை ஆரம்பிக்கும்போது சக தாபனங்களுடன் கசப்பான உணர்வுடன் அல்லது போட்டி உணர்வுடனும் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதை நான் அடியோடு மறுக்கின்றேன். ஆனால் ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்றவர் தங்களது சொந்த முயற்சிகளில் சொந்த தாபனங்களை அமைக்கின்ற செயல்ப்பாடுகளுக்கு நான் எப்போதும் ஒத்துழைப்பும் உற்சாகமாகவும் தூண்டுகோலாகவும் இருந்து வந்திருக்கின்றேன். தற்போது என்னுடன் கடமையாற்றும் சக சட்டத்தரணிகள் இவ்வாறு செய்யும்பட்சத்தில் தொடர்ச்சியான ஒத்துழைப்பை அளிக்கத்தயாராக உள்ளேன் என பல தடவைகளில் உறுதியளித்துள்ளேன். இப்போது எனது தாபனத்தில் சக சட்டத்தரணிகளாக திருமதி ரஞ்சதயாளினி குலசேகரம், திரு தனராஜசிங்கம் திரு நேமிநாதன் ஆகியோருடன் பல சட்டத்தரணிகள் கடமையாற்றுகின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் காலக்கிரமத்தில் தங்களது சொந்த தாபனத்தை ஆரம்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

தமிழ் அகதிகளுடன் எனது சேவை மிக நெருக்கமாக இருக்கின்றது.

நான் எனது தாபனம் ஆரம்பித்த காலத்தில் இருந்தே இலங்கைத் தமிழர்கள் இந்நாட்டிற்கு தஞ்சம்கோரி வருவது அதிகமாக இருந்ததினால் எனது தாபனத்தில் ஏராளமானோர் சேவையை நாடி வந்தார்கள். 1993ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த அரசினால் கொண்டுவரப்பட்ட தஞ்சம்கோருவோர் மேன்முறையீட்டு விண்ணப்பம் என்ற சட்டப்பிரமாணங்களுக்கு முன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கு சட்டத்தரணிகளின் சேவை வெகுவாக தேவைப்பட்டதாக தெரியவில்லை. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் . அரச பாதுகாப்புப் படையின் அட்டூழியங்களினால் பொதுவாக தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்ல என்ற காரணத்தினால் மனிதாபிமான அடிப்படையில் குடிவரவு விதிகளுக்கு பிறம்பான வகையில் தொடர்ச்சியான அனுமதி விசாக்களை வழங்கி வந்தார்கள். இதனால் இவற்றிற்கு எதிராக மேன்முறைமீடுகளோ அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட நீதித்துறை சேவைகளோ பெருமளவு பங்கெடுக்கவில்லை. இலங்கைத் தமிழ் அகதிகளைப் பொறுத்தமட்டில் அவர்களின் தஞ்சம்கோரும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதில், தங்சம்கோருவோர் இந்நாட்டில் வேலை செய்வதற்கான அனுமதியைப் பெறுதல் பிரயாணப் பத்திரங்கள் பெறுதல் போன்றவற்றிலே எமது சேவை தேவைப்பட்டது. அக்காலகட்டத்தில் எமது தாபனத்தின் சார்பில் விண்ணப்பித்த சகல தமிழ் அகதிகளுக்கும் எவ்வித பிரச்சனையும் இருக்கவில்லை என்று தான் சொல்லவேண்டும். ஆனால் புதிய சட்ட மூலம் கொண்டுவந்தபின்பு நிலைமை மிகவம் நெருக்கடியாக இருக்கின்றது. நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாக குடிவரவு அதிகாரிகள் அழுத்தமான கடினப்போக்கை காட்டுகின்றார்கள்.

## இலங்கைத் தமிழ் அகதிகளின் இன்றைய நிலைக்கு பிரிட்டிஷ் மக்களே பொறுப்பு.

இலங்கைத் தமிழ் மக்களைப பொறுத்தமட்டில் அவர்களின் இன்றைய அரசியல் பொருளாதாரப் பிரச்சனையில் முகம் கொடுக்கவேண்டிய கடமைப்பாடு பிரிட்டிஷ் அரசிற்கும் மக்களுக்கும் உண்டு. பிரிட்டிஷ் சாம்பிராஜ்யம் இலங்கையை ஆண்டபோது –1933ஆம் ஆண்டு கோல்புறூக் அரசியல் திட்டத்தின் மூலம் பாரம்பரிய தமிழர்களின் தனியான தாயகமான வடகிழக்கு மாகாணத்தை ஒருமையான ஆட்சிக்கு கொண்டு வந்ததன் மூலம் தமிழர்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக்கியது மட்டுமன்றி 1948ஆம் ஆண்டு பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறும்போது தமிழர்களின் தாயகப்பிரச்சனை சிங்களவர்களின் கையில் ஒப்படைத்துவிட்டு வந்தார்கள். இதன் அடிப்படையில் இன்று நாங்கள் நாடற்றவர்களாக நாடுவிட்டு நாடுகளுக்கு அகதிகளாக திரிவதற்கு நிலைமையை உண்டாக்கிய பொறுப்பை பிரிட்டிஷ் மக்கள் ஏற்க வேண்டும். இங்கு தஞ்சம்கோரி வருகின்ற தமிழ் அகதிகளை போலி அகதிகள் என்றும் பொருளாதார குடிவரவாளர்கள் என்றும் பிரிட்டிஷ் அரசும் அதிகாரிகளும் பட்டம் சூட்டுவது பொறுப்பற்ற ஒரு செயலாகும். அன்று தொடக்கம் இன்று வரை வர்த்தகத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்ட பிரித்தானிய சாம்பிராஜ்யம் – அரசு அதே நோக்கில் இலங்கை இனவாத அரசுடன் உறவுகளை வைத்திருக்கின்றது. லாபம் பெறும் நோக்குடன் இலங்கைக்கு ஆயுதங்களையும் மற்றும் யுத்த தளபாடங்களையும் விற்பனை செய்யும் பிரிட்டிஷ் அரசு அதனால் பாதிக்கப்பட்டு தமது உயிரைப் பாதுகாக்க அகதிகளாக இந்நாட்டிற்குள் தஞ்சம் புகுவோரை நாடுகடத்தும் செயலில் ஈடுபடுகின்றது.

## தனிப்பட்டவர் தகுதி –தஞ்சம் கோருவோரை திருப்பி அனுப்பப் பாவிக்கும் ஒரு ஆயுதம்

தற்போதுள்ள சட்டமூலங்களின் மூலம் தனிப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் தராதர அடிப்படையில் பரிசீலனை செய்யப்படுகின்றது . ஒவ்வொரு தனிப்பட்டவர்களது விண்ணப்பங்களையும் மிகவும் அவதானமாக பெருமளவிலான சான்றுப்பத்திரங்களை சமர்ப்பித்து அகதி அந்தஸ்துக்குரிய ஒரு விண்ணப்பத்தை சட்டத்தரணிகளால் தயாரிக்க முடியும். ஆனால் இவ்வகையான சான்றுகளையும் தகவல்களையும் தயாரிப்பதற்கும் தேடிச் சேமிப்பதற்கும் நாம் பெரிய நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் எதிர் நோக்கியுள்ளோம். இவ்வகையான ஒரு விண்ணப்பத்தை தயாரிப்பதற்கு சட்டத்தரணிகளான நாங்கள் மாத்திரமன்றி சம்பந்தப்பட்ட தமிழ் அகதியும் தனது பூரண ஒத்துழைப்பையும் ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும். ஆனால் பெரும்பான்மையான தமிழ் அகதிகள் இப்பொறுப்புக்களை உணர்ந்து நடப்பதாகத் தெரியவில்லை. எனது தாபனத்தைப் பொறுத்தமட்டில் இலங்கைத் தமிழர்களின் விண்ணப்பங்களைக் கையாள்வதைவிட வேறு சில நாட்டவர்களின் அகதி விண்ணப்பங்களைக் கையாள்வதில் நல்ல பெறு பேறுகளைப் பெறுகின்றோம். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் வழங்கும் ஒத்துழைப்பும் உதவியும் தான் காரணம் என்று நான் சொல்வேன். நான் இவ்வாறு சொல்வதினால் முழுத் தமிழ் அகதிகளிலும் குறையைப் போட முயசிற்க்கவில்லை. பொதுவாக தஞ்சம் கோரும் தமிழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் விடயங்களை சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்துவிட்டால் பின்பு தங்களுக்கு அவற்றில் எவ்வித பொறுப்பும் இல்லை என்றும் சட்டத்தரணிகளே முழுவதையும் செய்து முடிக்கவேண்டும் எனவும் எதிர்பார்ப்பது தான் பிழை என நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**சட்டத்தரணிகளை குறைகூறுவதினால் பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியாது.**

தமிழ் அகதிகளின் சேவையுடன் எனக்கிருக்கின்ற அனுபவத்தில் பல சம்பவங்களையும் உதாரணங்களையும் தமிழ் அகதிகளின் பொறுப்பற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாக கூறமுடியும். நாம் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எம்மிடம் சேவையாற்றும் சட்டத்தரணிகள் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது இம்மாகாணங்களைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். இதனால் எம்மிடம் வரும் தமிழ் அகதிகளிடம் இருந்து எவ்வாறான முறையில் தமக்கு உயிராபத்து உண்டு என்பதை நிரூபிக்கத் தேவையான தரவுகள் தகவல்கள் என்பவற்றை தயாரிப்பதில் பெரும் பங்களிப்பை செய்யக்கூடியதாக இருக்கின்றது . ஆனால் சிலர் இவற்றைப் பிரயோசனப்படுத்த முயற்சிப்பதில்லை. இந்நாட்டிற்குள் தஞ்சம்கோரி வரும் ஒருவர் தனது குடிவரவு பிரச்சனை தீர்க்கப்படும்வரை அது அவருக்கு ஒரு வாழ்க்கைப் பிரச்சனை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் இதற்கு மாறாக வேறு பலதேவைகளின் முக்கியத்துவத்தை ஏற்படுத்திக் கொண்டு இதனை அவசியமென கருதாமல் இருக்கின்றனர். இதற்குதாரணமாக பின்வரும் சம்பவத்தை என்னால் கூறமுடியும். ஒரு குறிப்பிட்ட தமிழ் அகதியின் தஞ்சம் கோரும் விண்ணப்பம் குடிவரவு அதிகாரியினால் விசாரிக்கப்படவேண்டிய திகதி நேரம் பற்றி அவ்விண்ணப்பதாரிக்கு தெரியப்படுத்தவேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டது. அவர் எம்மிடம் வந்து தனது விண்ணப்பத்தைக் கையாள்வதற்கு அனுமதி தந்ததைத் தொடர்ந்து இது தொடர்பான பத்திரங்களைத் தயாரித்து குடிவரவு பகுதிக்கு சமர்ப்பித்திருந்தோம். இதன் பின்பு இக்குறிப்பிட்ட அகதி எம்முடன் எவ்வித் தொடர்பையும் கொண்டிருக்கவில்லை. விசாரணை பற்றி எமக்கு அறிவிக்கப்பட்டதும் இந்த விண்ணப்பகாரரை அழைத்து விசாரணையின்போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றியும் தனது விண்ணப்பம் தொடர்பான கேள்விகளுக்கு எவ்வகையான பதில்கள் அளிக்கப்படவேண்டும் என்பது பற்றி அவருக்கு எடுத்துக்கூறுவதற்காக எம்மைச் சந்திக்குமாறு தபால மூலம் அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால் இவ்வகதியிடம் இருந்து எவ்வித தொடர்புகளும் கிடைக்கவில்லை. ஒரு திங்கட்கிழமை நடக்கவேண்டிய விசாரணைக்காக முதல் நாட்களான சனி ஞாயிறு இரண்டு நாட்களிலும் அவரைத்தேடுவதில் எனது காலத்தைச் செலவு செய்தேன். இறுதியாக விசாரணை நடக்கவிருந்த திங்கட்கிழமை காலை தான் ஒருவாறு அவருடன் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்தக் குறுகிய கால நேரத்தில் முடியுமான அளவு இந்தவிசாரணை பற்றி விபரித்தேன். விசாரணையின்போது இந்த அகதி என்ன முறையில் நடந்துகொண்டாரோ அல்லது எவ்வாறான தகவல்களை தெரியப்படுத்தினாரோ தெரியாது ஆனால் குடிவரவுப் பகுதியின் விசாரணை அக்கிராச னரிடம் இருந்து நான் ஒரு விளக்கம் கேட்கும் கடிதமொன்றைப் பெற்றேன். இதன் சாரம் நான் எனது சட்டத்துறைச் சேவையை உகந்தமுறையில் செய்தேனா என்ற கேள்வியை எழுப்பியிருந்தது. இதன்பின்பு நான் நடந்த சம்பவங்களை தொகுத்து அவர்களுக்கு பதிலளித்த பின்பு என் மீது சுமத்தப்படவிருந்த குற்றச்சாட்டு விலக்கப்பட்டது. இந்தச்சந்தாப்பத்தில் முக்கியமான விடயமொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். இங்கு குறிப்பிட்ட தமிழ் அகதி தமது வழக்கை எம்மிடம் இருந்து வாபஸ் பெற்றுக்கொண்டார். இதற்கு அவர் கூறிய காரணம் நாங்கள் தனது விண்ணப்பத்தில் சிரத்தை எடுக்கவில்லை என்ற குற்றமாகும்.

**சட்டத்தரணிகளின் நடவடிக்கைகள் சட்ட அமைப்பின் கண்காணிப்பிற்கு உட்பட்டவைகள்**

சட்டத்தரணிகளான நாம் தங்களது பிரச்சனைகளைத் தகுந்தவாறு கையாளுவதில்லை என்றோ அல்லது தவறான முறையில் கட்டனங்களைப் பெற்றோம் என்றோ எவரும் எடுத்த எடுப்பிலேயே குறைகூறிவிட முடியும். முக்கியமாக தமிழ் அகதிகளிடம் இருந்து இவ்வகையான குற்றச்சாட்டுகளை அடிக்கடி எதிர்நோக்கியிருக்கின்றோம். இந்நாட்டில் சேவை செய்கின்ற சட்ட சம்பந்தமான தொழில்களில் ஈடுபடுகின்றவர்களில் நடத்தை பற்றியோ அல்லது அவர்களுடைய தொழில் சம்பந்தமான குற்றச்சாட்டுகளையோ (Law Society) சட்ட அமைப்புடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தொடர்பு கொள்வதற்கு எவர்க்கும் தடையில்லை. நாம் அவ்வான குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டோம் என நிரூபிக்கப்பட்டால் நாம் நடவடிக்கைக்கு உள்ளாகுவோம்.

**இலங்கைச் சமபவங்கள் பற்றிய முழு அறிவு குடிவரவு அதிகாரிகளுக்கு இல்லை.**

தற்போதைய குடிவரவு காரியாலயப் புள்ளி விபரங்கள் படி சுமார் 90 வீதத்திற்கு அதிகமான தமிழ் அகதிகளின் விண்ணப்பங்கள் அகதி அந்தஸ்துக்கு தகுதி அற்றவை என நிராகரிக்கப்படுகின்றன. இவற்றிற்கு குடிவரவு அதிகாரிகளினாலும் , நடுவர்களினாலும் கூறப்படும் காரணங்கள் முழுவதும் கெபாருத்தமானவை என்று சொல்லமுடியாது. குடிவரவு விதிகளுக்கு அல்லது தஞ்சம்கோரும் சட்டம் சம்பந்தமான கோட்பாடுகளுக்கு அமைய தமிழ் அகதியின் விண்ணபப்பங்கள் தயாரிக்கப்படவில்லை என்றோ அல்லது ஐக்கிய நாடுகள் அகதிகள் சாசனத்தின் விதிகளுக்கு தகுதி அற்றவை என்னும் காரணத்தினாலோ விண்ணபபமொன்றை நிராகரிப்பதற்கு அதிகாரிகளுக்கு உரிமை உள்ளது. ஆனால் இலங்கையில் நடக்கின்ற பல்வேறு சம்பவங்களைச் சுட்டிக்காட்டி அதன் அடிப்படையில் விண்ணப்பங்களை நிராகரிப்பதும் அகதிகள் திரும்பிப் போகக்கூடிய சூழல்கள் பற்றிய கருத்துக்களைக் பரிந்துரைப்பதும் சிபார்சுகளைச் செய்வதும் குடிவரவு அதிகாரிகளின் அல்லது நடுவர்களின் உரிமை அன்றோ அல்லது கடமை அன்றோ நான் கருதவில்லை. இவர்கள் நடந்துகொள்ளும் முறையை கவனித்தால் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுப்பதாக ஒத்துக் கொள்ளமுடியாது.

**புதிய சட்டங்கள் வெளிநாட்டவரின் வருகையை அடியோடு நிறுத்தும் செயல்.**

தற்போது நடைமுறையில் இருக்கின்ற சட்ட மூலங்களும் எதிர்காலத்தில் வருகின்ற சட்டமூலங்களும் போலியான தஞ்சம்கோரும் வெளிநாட்டவர்களின் வருகையை கட்டுப்படுத்த கொண்டுவரப்படும் சட்டங்கள் எனவும் நேர்மையான அகதியை இந்நாட்டில் அடைக்கலம்புக இடம்கொடுப்பதே காரணம் என இந்த அரசினால் சொல்லப்பட்டாலும் உண்மை அவ்வாறல்ல. தஞ்சம் என்ற பெயரை சொல்லி வருகின்ற சகல வெளிநாட்டவரையும் தடுக்கவும் வந்தோரை நாடு கடத்தவுமே இச்சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என நாம் உறுதியாகச் சொல்லமுடியும். இலங்கைத் தமிழ் அகதிகளை கட்டாயப்படுத்தி நாடு கடத்துவதைவிட இலங்கையில் நடக்கும் பிரச்சனைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவர இந்த பிரிட்டிஷ் அரசு தனது செல்வாக்கை பாவிக்க முடியும் .இலங்கை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் பல தலைமைகள் அடிக்கடி வந்துபோகின்றன. ஆனால் அகதிகள் இங்கு வருவதற்கு முக்கிய காரணமாக இருக்கின்ற இனப்பிரச்சனையில் எவ்வித மாற்றத்தையும் காணமுடியவில்லை. இலங்கையில் நடக்கும் சம்பவங்களை நியாயப்படுத்தி புதிய சட்டமூவங்களின் உதவியுடன் குடிவரவு அதிகாரிகள் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப எடுக்கும் நடவடிக்கைகள் இலங்கை அரசிற்கு வக்காலத்து வாங்குவது போன்றதாக தெரிகின்றது என்று நான் சொல்வேன்.

**நான் மற்றைய சட்டத்தரணிகளைவிட எவ்வகையிலும் மேன்மையானவன் இல்லை**

இந்நாட்டில் தமிழ் அகதிகளின் நலன்களில் கடமைபுரியும் சகல சட்டத்தரணிகளுக்கு இடையிலும் தங்கள் தொழில் ரீதியாகவோ அல்லது அனுபவ ரீதியாகவோ வெவ்வேறான அணுகுமுறைகளையும் நடைமுறைகளையும் கையாளலாம். ஆனால் இந்த நாட்டில் சகல சட்டத்தொழிலில் ஈடுபடுவோர் எல்லோரையும் கட்டுப்படுத்துவது ஒரே சட்டங்களும் பிரமாணங்களும் தான். இதனால் சட்டத்தரணிகளுக்கு இடையில் உயர்வு தாழ்வு என்பவற்றை சட்டிக்காட்டி வேறுபடுத்தி பார்ப்பவர்கள் தமிழ் அகதிகளே தவிர சட்டத்தரணிகள் அல்ல. என்னைப் பொறுத்தமட்டில் நான் எந்த ஒரு சட்டத்தரணியையும்விட எவ்வகையிலும் உயர்ந்தவனோ அல்லது தாழ்ந்தவனோ என்று கூறிக்கொள்ளமாட்டேன். ஆனால் தொழில்த்துறையில் முக்கியமாக தமிழ் அகதிகளின் விடயத்தில் ஏற்படுகின்ற தோல்வி வெற்றி இரண்டையும் வெளிப்படையாக ஒத்துக்கொள்பவன். வெற்றிகளை மட்டும் பெரிதாக வெளிப்படுத்துபவன் அல்ல.

**குடிவரவு அதிகாரிகளின் போக்கு சட்டத்தரணிகளுக்கு கடின விரக்தியை ஏற்படுத்துகின்றது.**

எனது தனிப்பட்ட சேவைக்காலத்தில் தமிழ் அகதிகளின்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை கையாளுவதில் பல வருட அனுபவத்தைப் பெற்றுள்ளேன் . சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்களின் சார்பில் விண்ணப்பங்களைச் செய்துள்ளேன். புதிய சட்டவிதிகளுக்கு பின்பு குடிவரவு அதிகாரிகளினால் தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை கையாளும் முறையை பார்க்கும்போது நாம் விரக்தியின் உச்சக்கட்டத்திற்கே போய்விட்டோம். சில சந்தர்ப்பக்கங்களில் தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களில் அதிகாரிகளினால் எடுக்கப்படும் முடிவுகள் அதிஷ்டத்தின் காரணமாகவோ அல்லது விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்கின்ற அதிகாரிகளின் தனிப்பட்ட குணத்தின் அடிப்படை காரணமாகவோ தீர்மானிக்கப்படுகின்றனவா என்ற சந்தேகமும் இப்போது எனக்கு எழுகின்றது. ஏனெனில் எனது விண்ணப்பகாரர் ஒருவருக்கு நடந்த சம்பவத்தின் அடிப்படையில் இதைத் தெரிவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்நாட்டில் குடிவரவு விதிகளுக்கு புறம்பான வகையில் ( ஈ, எல் ஆர் ) இருப்பிட அனுமதி வழங்கப்பட்டவர்கள் நாலு வருட தொடர்ச்சியான அனுமதி பெற்றபின் தங்களது குடும்பத்தை இணைப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் மனைவியோ அல்லது கணவனோ இந்நாட்டிற்கு வந்தபின்பு தஞ்சம் கோருவதுடன் குடும்பம் இணைவதற்கு விண்ணப்பம் செய்யும்போது எல்லாம் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்கள் எனது அனுபவத்தில் ஏராளமானவை என்று சொல்வேன். ஆனால் அண்மையில் இந்நாட்டிற்கு தஞ்சம்கோரி விண்ணப்பம் செய்த ஓர் பெண் தனது விண்ணப்பத்திற்கு பின்பு ஈ எல் ஆர் வழங்கப்பட்ட ஒருவரை சட்டப்படிதிருமணம் செய்து கொண்டார். இதன் பின்பு . கணவருக்கு நான்கு வருட இருபபிட அனுமதி இருப்பதினால் மனைவிக்கும் அந்த அடிப்படையில் அனுமதி வழங்கும்படி நாங்கள் விண்ணப்பம் செய்திருந்தோம். இவரின் விண்ணப்பம் நிராகரிகப்பட்டு அந்தப் பெண்ணின் தஞ்சம்கோரும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் குடும்பம் இணைவதாக இருந்தால் அவர் கொழும்புகுச் சென்று அங்கிருந்து இங்கு வருவதற்கு புதிய விண்ணப்பமொன்றை செய்யவேண்டும் என்றும் குடிவரவு அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த முடிவுக்கெதிராக இந்த நாட்டில் சட்டத்தின் உதவியுடன் எவ்வளவு மேன்முறையீடு செய்யமுடியுமோ யாவற்றையும் செய்தோம். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இறுதியாக ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் எமது விண்ணப்பத்தைச் செய்தோம் , பிரிட்டிஷ் நாட்டின் தீர்வுகளில் தாம் தலையிட முடியதென்று கையை விரித்துவிட்டனர். மகப்பேற்றை அடைந்திருக்கும் இந்தப் பெண் இப்போது நாடு கடத்தப்படும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார். இச்சம்பவம் பிரிட்டிஷ் அரசு அதிகாரிகளின் மனிதாபிமானமற்ற செயலையும் நான் முன் குறிப்பிட்ட அதிஷ்டம் தனிப்பட்டவர் குணம் என்பவற்றிலும் தங்கியிருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

**கொள்கைகளையும் தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தும் இயந்திரங்களை நிர்ப்பந்திப்பதில் சட்டத்தரணிகள் கூட்டாக இயங்க வேண்டும்.**

இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறை கொண்டோரும் அவர்களுக்காக கடமையாற்றும் அமைப்புக்கள் சட்டத்தரணிகள் தனிப்பட்டவர்கள் ஒன்றாக சேர்ந்து கூட்டாக நடவடிக்கையில் இறங்கவேண்டிய காலம் இது என்று நான் நிச்சயம் நம்புகின்றேன். தமிழ் அகதிகள் விடயத்தில் அரசும் அதிகாரிகளும் மனிதாபிமான முறையில் அனுகுமுறையைக் கையாள நிர்ப்பந்திக்க வேண்டும். இலங்கையில் தற்போது நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களை ஆதாரபூர்வமாக ஆவணங்களுடன் சமர்ப்பித்து தமிழ் அகதிகளின் சார்பில் நீதியைத் தேடுவதற்கு சட்டத்துறை இயந்திரங்களை நாடவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள், உதவி புரியும் தாபனங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து சட்டத்தரணிகள் கூட்டாகவோ அல்லது தனித்துவமாகவோ நடவடிக்கையில் இறங்க முன்வரவேண்டும். தமிழ் சட்டத்தரணிகளைப் பொறுத்தவரையில் எமக்கென்று தமிழர் சட்ட அறிஞர் சங்கம் இயங்குகின்றது. இதன் சேவைகள் பற்றி நான் தெரிவிப்பதற்கு உத்தியோகப் பற்றற்றவன் என்றாலும் பல ஆக்க நடவடிக்கைகளில் இச்சங்கம் ஈடுபடுகின்றது என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**நாம் எங்கிருந்தாலும் எமது மண்ணை மறக்க முடியாது.**

நாம் இந்த நாட்டிலும் மற்றைய நாடுகளிலும் வெவ்வேறு காரணங்களினால் அகதிகளாகவும் குடிவரவாளர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து வாழுகின்றோம். நாம் எவ்வாறு எப்படி எங்கிருந்தாலும் எமது தாயகத்தையும் எமது மண்ணையும் மறக்கக்கூடாது. துர்திஷ்டவசத்தினால் நாம் புகுந்த நாடுகளை சொந்தமாக்கிக்கொள்ள முயற்சிக்கின்றோம். இது எப்போதும் என்னைப் பொறுத்தவரையில் தற்காலிகமானதொன்றே. இதே அடிப்படையில் தான் சகல தமிழ் மக்களும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென விரும்புகின்றேன்.

**சட்டத்தரணிகள் என்பதால் விமர்சனத்திற்கு ஆளாகக்கூடாது என்பதல்ல.**

அகதிப் பத்திரிகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சட்டத்தரணிகள் சம்பந்தமாக பலதரப்பட்ட செய்திகள் விமர்சனங்கள் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. நல்லது செய்யும்போது தட்டிக்கொடுப்பதும் தவறுகள் செய்யும்போது கண்டிப்பதும் ஒரு பத்திரிகையின் தர்மமாகும். எனக்குத் தெரிந்தவரை அகதியின் தொடர்ச்சியான வெளியீட்டுக்கு இந்நாட்டில் தொழில் புரிகின்ற அநேகமான சட்டத்தரணிகள் பொருளாதாரம், மற்றும் பல வழியிலும் தங்கள் பங்களிப்பை செய்கின்றார்கள். இதேவேளை தமிழ் அகதிகளின் நலன்களில் அக்கறை கொண்டு செயலாற்றும் பத்திரிகை என்ற வகையில், சட்டத்தரணிகளின் செயற்பாடுகளினால் தமிழ் அகதி ஒருவர் பாதிக்கப்படுகின்றார் என்ற நோக்கில் அது பற்றி செய்தி வெளியிடவோ கருத்துத் தெரிவிக்கவோ அல்லது விமர்சிக்கவோ அகதிச் சஞ்சிகைக்கு உரிமை உள்ளது என்று தான் நான் கூறுவேன். சட்டத்துறையில் ஈடுபடுபவர்கள் என்பதினால் நாங்கள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பது இல்லை. அகதி தனது தனித்துவத்தை எப்போதும்

இழந்துவிடக்கூடாது. அதன் சிறந்த சேவையில் தொடர்ந்து ஈடுபட எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Legal Aid

# ARUL & CO

**SOLICITORS**

**ADMINISTRATORS OF OATHS**

OUR LEGAL SERVICES INCLUDES

*** PROPERTY * IMMIGRATION**

*** CRIMINAL & CIVIL * MATRIMONIAL**

**P.ARUL, LLB (Hons)(Lond)**

**Solicitor & Legal Executive**

**Tel : 0181 672 8964**

**21 Rectory Lane Tooting Broadway, London SW17 9PZ**

**Lura House 148 Mitcham Road, Tooting London SW 17**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IVAN KRAMA & CO
## SOLICITORS
## ADMINISTRATORS OF OATHS
### MR. PARAKRMA RANASINGHE
### MR.M.IVAN PERERA

WE SPECIALISE IN
* IMMIGRATION & NATIONALITY * CRIME * GENERAL LITIGATION
* CONVEYANCING * HOUSING WELFERE BENEFITS

LEGAL AID WORK UNDERTAKEN

CONTACT FOR ALL YOUR LEGAL SERVICES
348A KILBURN HIGH ROAD
LONDON NW6 2RT
TEL: 0171 624 8814 FAX : 0171 624 8813

# KSP SUPER FOODS

**KSP SUPER FOODS**

318,HIGH STREET NORTH
MANOR PARK
LONDON E12 6SA
TEL: 0181 471 7806
0181 552 8053

சகலவிதமான
இலங்கை,இந்தியப்
பொருட்களையும்
ஓடியோ வீடியோக்களையும்
மலிவுவிலையில்
மனநிறைவோடு பெற
நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்

**KSP SUPER FOODS**

447,449 BARKING ROAD
EASTHAM
LONDON
E6
TEL:
0181 503 5483


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்றைஸ் தமிழ் ஒலிபரப்புடன் கடந்த ஆறு வருடம்

### இணைப்பாளர் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்

சண்றைஸ் வானொலியின் தமிழ் ஒலிபரப்பு தனது ஆறாவது நிறைவை நவம்பர் மாதம் கொண்டாடுகின்றது. புலம்பெயர்ந்த முக்கியமாக தமிழ் அகதிகளின் பிரச்சனைகளில் மிகவும் கரிசனையுடன் அணுகி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் இத் தமிழ் ஒலிபரப்பு பற்றி நேயர்கள் அகதி வாசகர்களின் பெருமளவு கருத்துக்கள் கடந்த காலங்களில் அகதிக்கு கிடைத்து வந்தன. இது தொடர்பாக சண்றைஸ் வானொலியின் இணைப்பாளராக கடமையாற்றும் திரு கலாநிதி நித்தியானந்தன் அவர்களின் கருத்துக்களை நேர்காணலின் மூலம் அகதி வாசகர்களுக்கு வெளிக்கொண்டு வருகின்றோம். இந்நேர்காணலின்போது அகதியின் சார்பில் கேட்கப்பட்ட கேள்விகள் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் யாவும் அகதி வாசகர்களினால் வெளிப்படுத்தப்பட்டவையாகும். அகதியின் வேண்டுகோளை ஏற்று இந்த நேர்காணலுக்கு ஒப்புதல் அளித்த திரு கலாநிதி நித்தியானந்தன் அவர்களுக்கு அகதி சஞ்சிகை நிர்வாகம் நன்றியைக் கூறுகின்றது. புகைப்படங்கள் அகதிக்காக புகைப்படக் கலைஞர் ஈஸ்ட்காம் சிவா சிவபாலன் அவர்களால் எடுக்கப்பட்டன.

**? சண்றைஸ் தமிழ் ஒலிபரப்புக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்புகள் எவ்வாறு ஆரம்பித்தன?**

பதில்– 1989நவம்பர் மாதம் 5ஆம்திகதி திங்கட்கிழமை சண்றைஸ் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது. சண்றைஸ் வானொலி பிராந்திய அடிப்படையில் இந்திய உபகண்டத்தைச் சேர்ந்தவர்கள் பெருவாரியாக வாழும் மேற்கு லண்டனில் நடத்தப்படுவதற்கு அரசினால் வழங்கப்பட்ட ஒரு அனுமதியாகும். இந்த அனுமதியைப் பெற்றவர்களுக்கும் எனக்கும் இருந்த தனிப்பட்ட தொடர்புகளினால் தமிழ் ஒலிபரப்பு ஒன்றை செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்த ஒலிபரப்பு ஆரம்பித்த காலத்தில் எனது தனிப்பட்ட அக்கறையினாலும் முயற்சிகளினாலும் தான் தமிழ் ஒலிபரப்பு ஒன்றை நடத்தக்கூடிய வல்லமை எமக்கு உண்டு என்று சண்றைஸ் நிர்வாகத்திற்கு நிரூபித்து வந்துகொண்டிருந்தோம். சுருங்கச் சொல்வதானால் இந்த ஒலிபரப்பின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை தமிழ் ஒலிபரப்பு என்பது எனக்கும் சண்றைஸ் நிருவாகிக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையே தவிர அமைப்புக்களையோ அல்லது தாபனங்களையோ சேர்ந்தது அல்ல. இப்படியான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது எமக்கு இடையில் இருந்த பரஸ்பர நம்பிக்கையும் புரிந்துகொள்ளும் தன்மையும் தானென நான் இப்போதும் நம்புகின்றேன். இந்த அடிப்படையில் தொடர்ச்சியான வளர்ச்சியைக் சண்றைஸ் தமிழ் ஒலிபரப்பு கண்டுள்ளது. 1994ஆம் ஆண்டளவில் சண்றைஸ் லண்டன் முழுவதற்கும் தனது ஒலிபரப்பை செய்யக்கூடிய அனுமதி பெற்றவுடன் தமிழ் ஒலிபரப்பை மூன்று நாட்கள் செய்யக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

**? தமிழ் ஒலிபரப்பு நிர்வாகத்தின்போது கடந்த காலத்தில் உங்களுக்கு நெருக்கடியான சந்தர்ப்பம் ஏதும் ஏற்பட்டதுண்டா?**

பதில்– இந்த ஒலிபரப்பை ஆரம்பித்த காலத்தில் இதற்கு வழங்கப்படும் கொடுப்பனவு கட்டணங்களில் எவ்வளவு என்ற கட்டுப்பாடு இருந்ததில்லை. விளம்பரத்தினால் சேர்க்கப்பட்ட பணத்திலிருந்து கட்டணத்தைச் செலுத்தக்கூடிய சந்தர்ப்பம் இருந்து வந்தது. இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து வெவ்வேறான பல சந்தர்ப்பங்களில் எமது சமூகத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த பலர் இதனைப் பொறுப்பெடுத்து நடத்த பேரம் பேசினார்கள். போட்டியும் போட்டார்கள். இதனால் மற்றவர்களின் கைகளுக்கு போவதற்கு மாறாக அதற்கு வழங்கப்படும் பணத்தொகை கட்டாயக்கொடுப்பனவுகளாக மாறிவிட்டது.போட்டி மனப்பான்மை கொண்ட சிலரின் குறுக்கீடுகளினால இந்த தமிழ் நிகழ்ச்சி நேரத்தை ஒரு குறிப்பிட்ட தொகைக்கு நாம் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம். எமது சமூகத்திலுள்ள சிலரின் மனப்பாங்கை நினைத்துபல தடவை நான் வேதனைப்பட்டுள்ளேன். இந்நாட்டில் றேடியோ தொலைக்காட்சி போன்றவற்றில் நேரங்களை வாங்கி நிகழ்ச்சிகள் நடத்துவது கஷ்டமான காரியம் ஒன்றல்ல .சண்றைஸ் வானொலியுடன் போட்டி போடுவதை விட்டுவிட்டு வேறு ஒரு வானொலியில் நிகழ்ச்சியை நடத்தி இதற்கு எதிராக இன்னும் ஒரு போட்டி நிகழ்ச்சி உருவாக வேண்டும் என்பதையே நான் வரவேற்கின்றேன். இதனால் நிகழ்ச்சிகளின் தரம் சிறப்பு என்பன சீர்தூக்கிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். பல தமிழ் நிகழ்ச்சிகள் வெவ்வேறு வானொலிகளிலும் உருவாகுவதை நாம் எப்போதும் ஊக்குவிப்போம்.

**? தற்போது உள்ள ஒலிபரப்பு நேரத்திலிருந்து உடனடியான ஏதாவது மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டா?**

தற்போதுள்ள நேரத்தைவிட மேலதிகமாக கூட்டவோ புதிய நேரங்களை மாற்றி அமைக்கவோ நாம் முயற்சிக்கவில்லை எதிர்காலத்திலும் முயறச்சிவிக்கும் நோக்கமில்லை. றேடியோ நிகழ்ச்சிகளில் இருந்து பல படிகள் உயர்ந்து தொலைக்காட்சி தமிழ் சேவை ஒன்றில் நிகழ்சிகளை நடத்தக்கூடிய சந்தர்ப்பத்தை பெறுவதிலேயே எனது முயற்சிகளை ஈடுபடுத்தவுள்ளேன்.

இதற்கு ரிய சந்தர்ப்பங்கள்
வாய்ப்புகள் தென்ப
வானொலி நிர்வா
நட்பின் அடிப்படையில்
அல்லது நேரங்களை
செய்வதிலையோ

அதிகளவு கட்டணங்கள்
சந்தர்ப்பம் ஏற்படும்.
பணவசதிகளை நாம்
இருந்தாலும் அவற்றை
நடத்துவதில் செலவு
எதிர்பார்க்கின்றேன். தமிழ்
அல்லது தமிழ்
நடத்துவதற்கு
தங்கியிருக்கவேண்டிய
அதுமட்டுமல்லாது



மிகவிரைவில் ஏற்படக்கூடிய
டுகின்றன. சண்றைஸ்
கிகளுடன் எமக்கிருக்கின்ற
மேலதிக நேரத்தையோ
மாற்றி ஒலிபரப்புக்களைச்
சிரமமிருக்காது ஆனால்
பணக்கொடுப்பனவுகளில்
செலுத்தவேண்டிய
அவ்வாறு செய்வதற்கான
பெறக்கூடியதாக
தொலைக்காட்சி ஒன்றை
செய்யலாமென நாம்
வானொலி நிகழ்ச்சியையோ
தொலைக்காட்சி ஒன்றை
விளம்பரங்களிலேயே
நிலைமை உண்டு.
தமிழ் வர்த்தக தாபனங்களில்

இருந்தே விளம்பரங்கள் பெறக்கூடிய வாய்ப்புக்கள் மட்டும் உண்டு. இதனால் தற்போதுள்ள ஒலிபரப்பு நேரத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு தொலைக்காட்சிச் சேவை ஒன்றை நடாத்துவதற்குரிய முயற்சியில் வெற்றி பெறுவோம் என எதிர்பார்க்கின்றோம்.

**? தமிழ் ஒலிபரப்பில் இடம் பெறும் நிகழ்ச்சிகள் என்ன அடிப்படையில் நடத்தப்படுகின்றன.**

நாம் தமிழ் ஒலிபரப்பை ஆரம்பித்த போது முக்கியமான நிகழ்ச்சியில் செய்திகள் முக்கியத்துவத்தைப் பெறவேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தோம். காலக்கிரமத்தில் நேயர்களினதும் கரிசனையுள்ள ஆதரவாளர்களின் ஒத்துழைப்பினால் பல்வேறு நிகழ்ச்சிகள நடத்தக்கூடிய சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. நாம் வாரத்திற்கு மூன்று நாட்கள் என நிகழ்ச்சிகளை ஆரம்பித்தபோது நேயர்களின் ரசனைக்கு ஏற்ப நிகழ்ச்சகளை தயாரித்தோம். வாரத்திற்கு மூன்று மணித்தியாலங்களில் நேயர்களின் முழு எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும் கூடியளவு திருப்திப்படுத்த முயற்சிக்கின்றோம். காலத்திற்கு ஏற்ப புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துவதும் நிகழ்ச்சிகளில் மாற்றம் கொண்டுவருவதும் நாம் தொடர்ச்சியாக கவனத்தில் கொண்டு வந்துள்ளோம். நேயர்கள் காட்டுகின்ற அக்கறையிலிருந்து அவர்கள் பங்கு கொள்கின்ற தன்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் எதிர்காலத்தில் பல புதிய நிகழ்ச்சிகளை நடத்துவது பற்றி தீர்மானிக்கின்றோம்.

**? தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஈடுபடுகினறவர்களின் சேவை எவ்வாறான அடிப்படையில் கிடைக்கின்றது.**

தமிழ் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போது என்னுடன் கைகொடுத்து உதவியவர்கள் இன்றும் என்னுடன் இருக்கின்றார்கள். சிலர் வானொலி ஒலிபரப்பு சேவைகளில் தங்களை ஈடுபடுத்தி பல வருட அனுபவத்தைக் கொண்டவர்கள். நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு தேவையானோர் தேவைப்படும் போது பரந்த அடிப்படையில் தெரிவு முறை ஒன்றில் சேர்த்துக்கொள்ளுகின்றோம். சண்றைஸ் வானொலி தமிழ் நிகழ்ச்சியில் சேவை செய்கின்ற நான் முதல் சகலரும் எவ்விதவருமானத்தையும் எதிர்பாராது சமூக சேவை புரியும் மனப்பாங்குடன் கடமை புரிகின்றார்கள். இவ்வானொலியில் நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பான ஒவ்வொருவரும் தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து தாமாகவே இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். சுமார் பத்துப்பேர் அடங்கிய சண்றைஸ் தமிழ் வானொலி நிகழ்ச்சிக்குழுவில் ஒவ்வொருவரும் பரஸ்பரம் தங்களுக்குள் ஒரு புரிந்துணர்வையும் கட்டுப்பாட்டுணர்வுகளையும் கொண்டுள்ளார்கள் என்பதினால் தான் இவ்வானொலி கடந்த ஆறு வருட காலமாக ஸ்திரமாக நடைபெறுகின்றது என்று சொல்லக்கூடியதாக இருக்கின்றது. சண்றைஸ் ஒலிபரப்பு நேரத்தைப் பொறுத்தவரையில் இதில் பங்கு கொள்பவர்களின் சமூகப்பணி புரியும் சேவை மேலோங்கி உள்ளது என்பதை என்னால் உணர முடிகின்றது. ஒவ்வொருவருக்கும் உள்ள திறமைகளை வெளிக்கொண்டு வருவதில் எவ்வித கட்டுப்பாடும் சண்றைஸ் தமிழ் வானொலியைப் பொறுத்தவரையில் இல்லை என்பதை வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

**? சண்றைஸ் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கேட்கின்ற நேயர்களில் பெரும்பான்மையினர் செய்திகளை மாத்திரமே விரும்பிக் கேட்கின்றார்கள். -அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?**

இக்கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகினறேன்.

ஆனால் எமக்குக் கிடைக்கின்ற அபிப்பிராயங்களின்படி செய்திகளைவிட மற்றைய நிகழ்ச்சிகள் சிறப்பானவை இல்லை என்பதோ அவசியமற்றவை இல்லை என்றோ எடுத்துவிடமுடியாது . எமது நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்ற நேரம் இதற்கு ஒரு காரணமாகவும் இருக்கின்றது. பகல் வேளைகளில் வேலைகளுக்கு செல்லும் பெரும்பான்மையான நேயர்கள் இரவு 11 மணிவரை நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இதனால் நிகழ்சிகளில் முதலில் வரும் செய்திகளை மட்டும் கேட்பதில் முக்கியத்துவத்தை கொடுக்கின்றார்கள் என நினைக்கின்றேன். ஆனால் இதேவேளை சண்றைஸ் வானொலியை விரும்பிக் கேட்கின்ற பெரும்பான்மையான இளம் வயதினர் தொடர்ச்சியான நிகழ்சிகளை 11 மணிவரை தொடர்ந்து கேட்கின்றார்கள் என்ற தகவல்களும் எமக்குக் கிடைக்கின்றன. நிகழ்ச்சி நேரத்தை மாற்றி பத்துமணிக்கு முதல் நடத்தப்படுவது நல்லதென வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. நான் முன்பு குறிப்பிட்டது போல இப்படியான நேரமாற்றங்களைச் செய்வதற்கு தேவைப்படும் பண வருவாயில் எமக்கு பிரச்சனைகள் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**? சினிமா சம்பந்தமான செய்திகளுக்கும் பாடல்களுக்கும் கொடுக்கின்ற முக்கித்துவம் பற்றி பலர் குறைகூறுகின்றார்கள்.இவற்றுக்குப் பதிலாக வேறுபல நிகழ்ச்சிகளை நடத்தலாமென கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன ?**

சினிமாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பது தவறானது. வாரமொன்றிற்கு ஒலிபரப்பும் மொத்த நேரத்தில் சுமார் 25 வீதத்திற்கு குறைந்த அளவே சினிமாப்படங்களுக்கும் செய்திகளுக்கும் இடம் கொடுக்கின்றோம். எமது ஒலிபரப்பில் தங்கள் விளம்பரங்களைச் செய்கின்ற உரிமையாளர்கள் தங்கள் விளம்பரங்களை எத்தனைபேர் கேட்கின்றார்கள் என தங்களுக்குள் ஒரு கணிப்பை செய்துகொண்டிருக்கின்றார்கள். இங்குள்ள ஏராளமான இளம் தமிழ் நேயர்கள் சண்றைசில் இடம்பெறும் சினிமாப்பாடல்களையும் சினிமாசம்பந்தமான செய்திகளையும் பெரிதும் விரும்பிக் கேட்கின்றார்கள். இந்த அடிப்படையில் விளம்பரதாரர்களின் விளம்பரங்களையும் பெருஅளவிலான நேயர்கள் கேட்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. இதன் அடிப்படையில் தான் விளம்பரங்களும் தந்து பணஉதவியையும் செய்கின்றார்கள். நேயர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப நிகழ்ச்சிகளையும் சமமாகச் செய்ய வேண்டும். சண்றைஜ் வானொலியில் சினிமாப்பாடல்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதோ அல்லது நேரம் அதிகமாக ஒதுக்கப்படுகின்றது என்பதிலோ உண்மையில்லை என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

**? நிகழ்ச்சியை நடத்துபவர்கள் தங்களின் அரசியல் கலை கலாச்சார துறைகளில் உள்ள நம்பிக்கைகளையும் விருப்புக்களையும் அதனுடன் தொடர்பான கருத்துக்களையும் புகுத்தி நிகழ்ச்சிகளை நேயர்கள் கட்டாயப்படுத்தி கேட்கவேண்டிய சூழ்நிலையையும் உண்டாக்குகின்றார்கள். இதனால் சில சந்தர்ப்பங்களில் முக்கியத்துவம் பெறவேண்டிய விடயங்கள் கூட தவிர்க்கப்படுகின்றன என பொதுவாககுறை கூறப்படுகின்றது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**



நிகழ்ச்சிகள் ஆரம்ப காலத்தில் இருந்து இன்றுவரை பல துறைகளிலும் நிகழ்ச்சிகளின் தரத்தை அபிவிருத்திசெய்து கொண்டு வந்திருக்கின்றோம். குறைகள் சுட்டிக்காட்டப்படும் போதெல்லாம் அவை நிவர்த்தி செய்யப்பட்டு வந்திருக்கின்றன நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்களும் நடாத்துபவர்களும் வெவ்வேறு துறைகளில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள். இதனால் அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு பல நிகழ்ச்சிகளை தயாரித்து நடத்துகின்றார்கள். இது சமூகப்பணிபுரியும் பலரது கூட்டு ஆக்கங்களுக்கு ஒரு ஆரோக்கியமான நடைமுறையாகும். ஆனால் எந்தச்சந்தர்ப்பத்திலும் கட்டாயப்படுத்தியோ நேயர்களின் விருப்புக்களுக்கு மாறாக நிகழ்ச்சியை திணித்ததாகவோ ஆதாரங்கள் இல்லை. சில சந்தர்ப்பங்களில் சில முக்கியவிடயங்களுக்கு அதிக கவனத்தை செலுத்தி முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டியுள்ளது உதாரணமாக அண்மைக் காலமாக தமிழ் அகதிகள் பிரச்சனை தொடர்பான பல நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சண்றைஸ் வானொலியின் பெரும்பான்மையான நேயர்கள் இந்நாட்டில் அகதிகளாக வாழும் தமிழ் நேயர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து நம் நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. நான் முன்பு குறிப்பிட்டது போல் சுமார் பத்து நலன்புரியும் தொண்டர்கள் நிகழ்ச்சிகளை நடத்தும் போது அவர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் அனுபவமான திறமைகளை வெளிக்காட்டுவதை தவிர்க்கமுடியாது என்பது தான் எனது கருத்தாகும். ஆனால் நீங்கள் குறிப்பிட்டது போல் எந்த நிகழ்ச்சிகளிலும் நேயர்களுக்கு விரும்பாதவற்றை கட்டாயப்படுத்திப் புகுத்தவது சண்றைஸ் வானொலியின் தமிழ் ஒலிபரப்பின் நோக்கமல்ல என்பதை நான் திட்டவட்டமாக கூறுவேன்.

**? வானொலி நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் பெறுகின்றவர்கள் நேயர்கள். அவர்களின் கருத்துக்களை வரவேற்று அக்கருத்துக்களுக்கு பதில் அளிக்கக்கூடிய வகையில் நிகழ்ச்சி ஒன்றை ஏன் ஒலிபரப்பில் சேர்த்துக்கொள்ள முடியாது. இதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?**

இது முற்றிலும் அவசியமானது. எமது நிகழ்ச்சியின் போதெல்லாம் நேயர்களை நிகழ்ச்சிகள் பற்றிய கருத்துக்களை எழுதும்படி கேட்டுக்கொண்டே வந்துள்ளோம் ஆனால் நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதுபவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவானதே எமது நிகழ்ச்சிகள் பற்றிய குறைநிறைகளை நேயர்கள் சுட்டிக்காட்டி எழுதினால் அக்கருத்துக்களுக்கு மதிப்பளித்து நேயர்களின் கடிதங்கள் நிகழ்ச்சியில் இடம் பெறக்கூடியதான ஒரு தொடர்ச்சியான நிகழ்ச்சியை 'தயாரித்து அளிக்க முடியும் . நிகழ்ச்சிகள் பற்றிய தரத்தை நேயர்களின் கருத்துக்களில் இருந்தே நாம் கணிக்கமுடியும். நேயர்கள் நிச்சயமாக தங்கள் கருத்துக்களை சண்றைசிற்கு எழுதவேண்டுமென கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**? சண்றைஸ் தமிழ் ஒலிபரப்பில் இடம் பெறும் செய்திகளில் பொதுவாக காலம் கடந்த தகவல்களே தெரிவிக்கப்படுகின்றன. நேயர்கள் பொதுவாக சுடச்சுட செய்திகளை வானொலி ஒன்றில் எதிர்பார்ப்பது தான் சகஜம். இவ்விடயத்தில் நேயர்கள் பூரண நிறைவைப் பெற எவ்வாறான நடவடிக் கைகளை மேற்கொள்வீர்கள்.**



நான் முன்பு குறிப்பிட்டது போன்று இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் சண்றைஸ் வானொலிக்கென்று நிருபர்களை நியமித்து செய்திகளை உடனுக்குடன் எடுப்பதற்கு பணவசதியும் மற்றைய வசதிகளும் எமக்கில்லை. சுடச்சுடச் செய்திகளை உடனுக்குடன் கொண்டுவரவேண்டும் என்று நாங்களும் விரும்புகின்றோம். இங்கு வெளிவரும் பத்திரிகைகளை எல்லோரும் வாங்கிப்படித்து செய்திகளை அறிந்து கொள்வதில்லை. காலம் கடந்த செய்திகளைக் கூட சண்றைஸ் வானொலியின் மூலம் கேட்க அநேகமானவர்கள் காத்திருக்கின்றார்கள். நூற்றுக்கு நூறுவீதமாக உடனடி செய்திகளைக் கொடுக்கமுடியாவிட்டாலும் கூடியவரை வானில் அவற்றைக் கொண்டுவர முயற்சிவிக்கின்றோம். தற்போது இலண்டனில் இயங்கிக் கொண்டிருக்கும் வெவ்வேறு அரசியல் குழுக்களில் செய்திச் சேவைகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய செய்திகளில் இருந்தும் ஆதாரங்களுடன் கூடிய தகவல்களை சேர்த்துக்கொள்கின்றோம். கடந்த சில மாதங்களாக இந்தியாவில் முக்கியமாக தமிழ் நாட்டில் இருந்து செய்திகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றோம். செய்திகளை தயாரிப்பதும் வாசிப்பதும் நிகழ்சிகளை நடத்துபவர்களின் பொறுப்பு என்பதினால் அவர்களின் முயற்சிகளுக்கு ஏற்ப உடனுக்குடன் செய்திகளை வானின் அலைகளில் கொண்டுவருவது வித்தியாசப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் செய்தியை வாசிக்கின்றவரே போதியகரிசனை எடுத்து நேரடியாக தொலைபேசி மூலம் இங்கிலாந்திற்கு வெளியில் இருந்தும் செய்திகளை எடுக்கின்றார்கள். இவற்றிற்கு ஏற்படும் பணச் செலவுகளை ஈடுசெய்யக்கூடிய பணவசதி எமக்கில்லாதிருப்பதினால் இந்நிகழ்ச்சிகளைக் கூட ஊக்குவிக்கமுடியாத நிலைமையில் இருக்கின்றோம். நேயர்களின் விருப்பப்படி எதிர்காலத்தில் இத்துறையில் முன்னேற்றத்தை உண்டாக்கலாம் என எதிர்பார்க்கின்றோம்.

**? செய்திகளை தயாரித்து வழங்குபவர்கள் ஒவ்வொருவரும் இலங்கை தமிழ் அரசியல் குழுக்களில் நம்பிக்கையுடையவர்களாகவோ அல்லது ஈடுபாடு உடையவர்களாகவோ இருக்கின்றார்கள். இதனால் சில சந்தர்ப்பங்களில் நடுநிலைமை தவறி செய்திகளை உண்மைக்கு மாறாகவோ அல்லது மிகைப்படுத்தியோ அல்லது குறைத்தோ தெரிவிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு பொதுவாக நேயர்களிடம் இருக்கின்றது இணைப்பாளர் என்ற வகையில் இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இலங்கையில் பிறந்த தமிழர் ஒவ்வொருவரும் இன்றைய சூழ்நிலையில் இலங்கை அரசியல் குழுவில் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை எவராலும் மாற்றமுடியாது. அந்த அடிப்படையில் எமது ஒலிபரப்பு நிகழ்ச்சியில் பங்குபெறுகின்ற எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. முக்கியமாக செய்திகளை தயாரித்து வாசிக்கின்றவர்கள் தமதுசொந்தக் கருத்துக்களையோ விருப்பு வெறுப்புக்களையோ செய்தி நிகழ்ச்சியில் தெரிவிக்கின்றார்கள் என்ற கருத்தை நான் ஆணித்தரமாக மறுக்கின்றேன். சில சந்தர்ப்பங்களில் சில தகவல்கள் அல்லது தரவுகள் மிகைப்படுத்தியோ அல்லது குறைத்தோ தெரிவிக்கப்பட்டிருக்கலாம். அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். உண்மைக்கு மாறான செய்திகளை சண்றைஸ் வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் ஒலிபரப்பப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றவை என என்னால் நிரூபிக்கமுடியும். சிலசந்தர்ப்பங்களில் பலருக்கு உண்மைத் தகவல்கள் அல்லது சம்பவங்கள் அதனுடன்கூடிய செய்திகள் கசப்பானவையாகவும் வெறுப்பானவையாகவும் இருக்கலாம். அதற்காக அவை உண்மைக்கு மாறானவை என்று கூறிவிடமுடியாது. நான் வெளிப்படையாக சொல்வதானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்றைஸ் வானொலியில் செய்தி வாசிப்பவர்கள் சமூகத்தில் இயக்க அரசியல் சார்பில் இனம் காணப்பட்டவர்கள். அவர்கள் சார்ந்திருக்கின்ற இயக்கம் சம்பந்தமான செய்திகள் தவறான முறையில் கூறப்பட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பாங்கை நாம் வளர்த்துக்கொண்டோம். சொல்லப்படுகின்ற விடயத்தைவிட சொல்கிறவர் யார் என்பதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இது ஒரு ஆரோக்கியமான அணுகுமுறை என்று சொல்லமுடியாது. தமிழ் சண்றைஸ் தமிழ் ஒலிபரப்பு தொடர்ந்தும் நடுநிலைமையாகவே இருக்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் உறுதிசெய்ய விரும்புகின்றேன். மேலும் என்னைப் பொறுத்தமட்டில் நானும் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவன். ஆனால் பொதுப்பணி என்று நான் ஈடுபடும்போது எனது சொந்தக்கருத்துக்களையோ அல்லது நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் நம்பிக்கையோ மற்றவர் மீது ஏற்றுக்கொள்ள எப்போதும் திணிக்கமாட்டேன். இதே அடிப்படயில் தான் கடந்த பல ஆண்டுகளாக எனது பொதுப்பணி தொடர்கின்றது. இது எனக்கு மாத்திரமல்லாது சமூகப்பணியில் சேவை செய்கின்ற எல்லோருக்குமே பொருந்தும் என்கின்றேன்

**? இலங்கையைப் பொறுத்தமட்டில் எமது தாயகத்தில் ஈழப்போராட்டம் மிகவும் நெருக்கடியான நிலைமையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. புலம் பெயர்ந்த நிலையில் வாழும் தமிழர்களுக்கு என்று இயங்கும் ஒரே ஒரு தமிழ் வானொலிச் சேவையான சன்றைஸ் இப்போராட்டத்திற்கு போதிய ஆதரவு கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு பரந்தளவில் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றிய உங்கள் பதில் என்ன?**

சண்றைஸ் வானொலியின் தமிழ் ஒலிபரப்பு ஈழத்தமிழர் போராட்டத்திற்கு என்றென்றும் தன்னால் முடியுமான ஆதரவையும் பங்களிப்பையும் தொடர்ந்து செய்யுமென இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகின்றேன். ஆனால் குழு ரீதியான இயக்க அரசியல் போட்டிகளுக்கும் அதனுடன் சம்பந்தமான செய்திகளுக்கும் சண்றைஸ் எப்போதும் முக்கியத்துவம் அளிக்காது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். எந்தவொரு செய்தித்தாபனத்திற்கும் ஒரு தனித்துவம் இருக்கவேண்டும் என்பது மரபு அதன் அடிப்படையில் சண்றை
ஸ் தமிழ் ஒலிபரப்பு தனது நடுநிலைமை என்ற தனித்துவத்தில் இருந்து கொண்டு தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் ஆதரவு அளிப்பதில்தான் எமது தமிழ் ஒலிபரப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு பக்கம் சார்ந்து கொண்டு நடுநிலைமை பற்றிப் பேசுவதில் ஏதாவது கருத்து இருக்கும் என்று நான் நினைக்கவில்லை ஈழத்தில் விடுதலைப் போராட்டம் பரந்த அளவில் நடக்கின்றது. ஐரோப்பாவில் இயங்குகின்ற ஒரு தமிழ்வானொலி என்ற வகையில் அப்போராட்டத்திற்கு முக்கியத்தவம் கொடுக்கவேண்டும் என்பதை நான் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன்.

**? சண்றைஸ் வானொலி நிகழ்ச்சியில் நீங்கள் ஒரு முக்கிய நிர்வாகி. தமிழ் ஒலிபரப்பு நிலைப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வகையில் தனிப்பட்ட வகையில் நீங்கள் ஈழப்போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர் எனப்பலரினாலும் வருணிக்கப்படுகின்றீர்கள். இது உண்மையா?**

-எனது சரித்திரம் தெரியாதவர்கள் இப்படி வர்ணிக்கலாம். அதில் தவறில்லை. 1978 ஆம் ஆண்டு முதல் தமிழர் விடுதலைப் போராட்டங்களில் முக்கிய பங்கை அளித்து வந்தவன். 1983ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்களைப் பின்னணியாகக் கொண்ட புத்தகமொன்றை எழுதி வெளியிட்டவன். இன்றும் ஒரு வகையில் நான் தமிழ் ஈழப் போராட்டத்தில் பங்கு கொண்டு எனது பங்கைச் செய்து கொண்டுதான் இருக்கின்றேன். இது பற்றி நான் இங்கு அதிகம் கருத்துக்களை தெரிவிக்க விரும்பவில்லை.

**? இன்றைய காலகட்டத்தில் இலங்கைத்தமிழ் அகதிகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகவிருக்கின்றார்கள் பல ஆயிரம் தமிழர்கள் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படுகின்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து எதிர்காலத்தில் முகம்கொடுக்கவேண்டியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக செய்திகள் ஆலோசனைகள் தகவல்களை உடனுக்குடன் வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பு சண்றைஸ் தமிழ் வானொலி ஒன்றின் மூலமே சாத்தியமாகும் என்பதை தமிழ் அகதிகள் சார்பில் அகதிச்சஞ்சிகை எதிர்பார்க்கின்றது. இதில் ஏதாவது சிரமங்களை சந்திக்க நேரிடுமா?**

எமது ஒலிபரப்பில் அதிகளவு தமிழ் அகதிகளின் பிரச்சனை பல்வேறு கோணங்களில் வெவ்வேறு நிகழ்ச்சிகளில் இடம்பெறுவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். முக்கியமாக சமூகப்பலகணி நிகழ்ச்சி பல சந்தர்ப்பங்களில் தமிழ் அகதிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனையில் மிகவும் கரிசனை கொண்டு முற்றான நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளது. அவற்றுடன் செய்திகள் செய்தியின் பிண்ணணி என்பவற்றில் தொடர்ச்சியான தகவல்கள் வெளியிட்டுக் கொண்டு வந்திருக்கின்றோம். தமிழ் அகதிகள் பிரச்சனை சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றை தொடர்ச்சியான முறையில் நடாத்தமுடியாவிட்டாலும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவற்றிற்குரிய முக்கியத்துவத்தை அளிக்க நாம் பின் நிற்கமாட்டோம். எமது நேயர்களில் பெரும்பான்மையானோர் இங்கு அகதிகளாக வாழும் தமிழ் அகதிகள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.மேலும் இவ் ஒலிப்பரப்பை நடாத்துகின்ற பெரும்பான்மையானோர் தமிழ் அகதிகளின் விடயங்களில் மிக கரிசனையும் பொறுப்புணர்ச்சியும் கொண்டவர்கள். இதனால் அகதிகள் சம்பந்தான நிகழ்ச்சிகளை நடத்துவதில் கஸ்டங்களை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கின்றன். இவ்வகையான எமது முயற்சிகளுக்கு அகதி சஞ்சிகையும் அகதிகளுக்காக சேவை புரியும் தாபனங்களும் சேர்ந்து கூட்டாக நடவடிக்கைகளில் இறங்க முயற்சிக்கவேண்டுமென விரும்புகின்றேன்.

**? சண்றைஸ் வானொலி நிகழ்ச்சிகளைவிட இதன்பெயரில் நடத்தப்படுகின்ற கானக்குயில் நிகழ்ச்சி பற்றி பல்வேறு விமர்சனங்கள் கருத்துக்கள் செய்யப்படுகின்றன. அகதிச் சஞ்சிகைக்கு கடந்த நிகழ்ச்சி பற்றி பல குற்றச்சாட்டுகளும் கடிதமூலமாகவும் நேரடியாகவும் தெரிவிக்கப்பட்டன. பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டு பல கருத்துக்கள் எமக்குக் கிடைத்தன.அவை ஒருதலைப்பட்சமான கருத்து என்ற அடிப்படையில் பிரசுரிக்க முயற்சிக்கவில்லை .மேலும் அகதி சஞ்சிகைக்கு இந்த நிகழ்ச்சி பற்றி எவ்வித அக்கறையும் கிடையாது. இது ஒரு பணம் திரட்டும் நிகழ்ச்சி என அறிகின்றோம். இதில் முக்கியம் என்னவென்றால் இதில் பெறப்படும் பணம் தனிப்பட்டவர்களுக்கா அல்லது சண்றைஸ் வானொலிக்கா என்பது பலரின் சந்தேகம். இது பற்றி நீங்கள் தரும் விளக்கம் என்ன?**

நீங்கள் குறிப்பிடுவது போல் இந்த நிகழ்ச்சி முற்றிலும் பணம் திரட்டும் வர்த்தக நிகழ்ச்சியே. சினிமாப்பாட்டுக்களையோ அல்லது பாடுகின்றவர்களையோ சண்றைஸ் வானொலி சார்பில் ஊக்குவிக்கும் எண்ணம் எமக்கில்லை. இந்த நாட்டில் சினிமாவைக்காட்டி எவ்வளவும் சம்பாதிக்கலாம். இது நாளாந்த வாழ்க்கையில் நாம் காண்கின்ற உண்மை. சினிமாவுக்காகவே ஒரு சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சி நடாத்தப்பட்டபோது இதற்கு ஏற்பட்ட கிராக்கி காரணமாக இப்போதும் தொடர்ந்து நடத்துகின்றோம். இதில் நகைச்சுவையான விடயம் என்னவென்றால் லண்டனில் நடத்தப்படுகின்ற அனுமதிக் கட்டணம் மூலம் உள்ளே விடுகின்ற நிகழ்ச்சிகளில் கள்ளத்தனமாக அனுமதிச்சீட்டு அச்சடித்து

இந் நிகழ்ச்சியைக் காணவந்தார்கள் என்பதில் இருந்து காணக்குயில் நிகழ்ச்சிக்கு எப்படியான மதிப்பு என்பதை நீங்கள் ஊகித்துக்கொள்ளவேண்டும். இது ஒருபுறமிருக்க வருடாவருடம் காணக்குயில் நிகழ்ச்சியில் சேர்க்கப்படும் பணம் வருடம் முழுவதும் நடத்தப்படும் வானொலி ஒலிபரப்பிற்கு ஏற்படும் பற்றாக்குறைக்கு பயன்படுத்தப்படுகின்றது.மேலும் கடந்த கானக்குயில் நிகழ்ச்சிக்கு பாடுவதற்கு விண்ணப்பம் செய்தோர் 80பேர். ஆனால் 20 பேர்வரையில் தான் தெரிவுசெய்யப்பட்டார்கள். அதனால் தெரிவுசெய்யப்படாத 60 பேரும் தெரிவு நியாயமாகச் செய்யப்படவில்லைஎன்று தான் குறைகூறினார்கள்.

**? யாரோ பாடிய பாடலைத் திருப்பிப் பாடுபவர்களுக்கு கானக்குயில் என்ற பட்டத்தைக் கொடுக்கின்றீர்கள். வர்த்தக ரீதியில் பணம் திரட்டுவது தான் நோக்கமென்றாலும் ஈழத்து மெல்லிசையையோ அல்லது புலம்பெயர்ந்த ஈழத்தவர்களின் கலையை ஊக்குவிக்கவோ உங்கள் வானொலி ஏன் ஒரு நிகழ்ச்சியை நடத்தமுடியாது.**

இங்கு குறிப்பிடுகின்ற ஒரு முயற்சியைச் செய்வதற்கு நாம் இப்போ திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றோம் இது விரைவில் நிறைவேறும் என எதிர்பார்க்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அகதி மாணவி கொழும்புக்கு அனுப்பப்பட்டார். இது யாருடைய தவறு? யாரைக் குறைசொல்வது?

கடந்த ஒக்டோபர் மாதம் நாலாம் ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12. 30 மணிக்கு லண்டன் ஹீத்துறு விமான நிலையத்தில் இருந்து கொழும்பு கட்டுநாயக்கா விமானநிலையத்திற்கு எயர் லங்கா விமானத்தின் மூலம் கட்டாயப்படுத்தி நாடு கடத்தப்பட்ட 22வயது நிரம்பிய செல்வி கிருஷ்சாந்தி கோபாலகிருஷ்ணன் பற்றிய தகவல்கள் வெளிவந்தன. அகதிக்குக் கிடைத்த தகவல்களின்படி அவரைப்பற்றிய விபரங்கள் பின்வருமாறு.1993ஆம்ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்பட்டு லண்டன் ஹீத்துறு விமான நிலையத்தில் இறங்கினார். விமான நிலையத்தில் தஞ்சம் கோரியும் விண்ணப்பம் செய்திருந்தார். விமான நிலையத்தில் 14.03.94 வரையிலான தற்காலிக அனுமதி குடிவரவு அதிகாரிகளினால் வழங்கப்பட்டிருந்தது. துர்திஷ்டவசமாக இவருடைய தஞ்சம்கோரும் விண்ணப்பம் ஜுலை 93க்குப் பின்பே புதியசட்ட விதிகளின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இலங்கையில் சாதாரண உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய இவர், இங்கு வந்தும் தொடர்ந்து உயர்தரப்பரீட்சையில் சித்தியெய்தி 1994ஆம் ஆண்டு குயின்ஸ்மேரி பல்கலைக்கழக பட்டதாரிப் படிப்பை ஆரம்பித்தார். வெளியூர் மாணவர்களுக்கான பல்கலைக்கழகக் கட்டணத்தை செலுத்தும்படி (சுமார் 7 ஆயிரம் பவுணை) செலுத்தும்படி பல்கலைக்கழகம் கேட்டதன் காரணத்தினால் அவரால் பரீட்சை எழுதமுடியாமல் போயிற்று. தான் இடையில் நிறுத்திய பல்கலைக்கழக பட்டதாரிக் கல்வியை தொடர வேண்டும் என்ற பிடிவாதத்தில் இந்தஆண்டு செப்டெம்பர் மாதம் புறூணை பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப்பட்டதாரிப பட்டத்தினைப் பெறுவதற்கு அனுமதி பெற்றிருந்தார்.

இவருடைய அகதி விண்ணப்பம் மூன்று வெவ்வேறு சட்டத்தரணிகளின் கைகளுக்கு மாறியதை அடுத்து 95ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் திகதி குடிவரவு அதிகாரிகள் பொலிசார் ஆகியோரினால் இவரது வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு காமஸ்சிமித் குடிவரவுத் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தான் திரும்பவும் முகாமை விட்டு வெளியேறி பல்கலைகழகப் படிப்பைத் தொடர முடியுமென நம்பியிருந்தார். இதனால் இவரின் வேண்டுகோளிற்கு இணங்க அவருக்கென்று பல்கலைக்கழகத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இவருடைய விண்ணப்பங்கள் போன்று நிராகரிக்கப்பட்ட நிலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்அகதிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையிலும் அவர்கள் உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படாத நிலையில் இருக்கும்போது இந்த அகதி மாணவி கட்டாயமாக திருப்பி அனுப்பப்பட்டதற்கு யார் காரணம் என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கே தெரியவேண்டும். இந்த நிலைமை மற்றுமொரு தமிழ்அகதி மாணவருக்கு நடக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவு அதிகாரிகளின் பார்வையில் தமிழர் பிரச்சனை......................

-திரு எம் மார்க்கண்டன் சட்டத்தரணி

இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள திடீர்த் திருப்பங்கள் எதுவும் எமது Home office நிர்வாகத்தினரின் கடும் போக்கை மாற்றியதாக தெரியவில்லை. நிராகரிக்கப்பட்ட அகதிகள் சார்பாகHome office க்கு நாம் செய்த சிபாரிசுகளுக்கு அவர்கள் தந்த பதில்களை பார்க்கும்போது இந்த நாட்டு அரசு சிறிலங்கா அரரை வெளிப்படையாக ஆதரிப்பதையும் தமிழ் அகதிகளை திருப்பியனுப்ப வேண்டும் என்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு இருப்பதும் தெளிவாகின்றது.

Home office க்கு நாம் எடுத்துக்காட்டிய காரணங்களுக்கு அவர்கள் தந்த பதில்களை சுருக்கி கீழே தருகின்றேன்.

1. அண்மையில் பல தமிழர்கள் மர்மமான முறையில் அரசு படைகளினால் கொலைசெய்யப்பட்டு வாவிகளிலும் ஏரிகளிலும் சடலங்கள் காணப்பட்டன. என்ற எமது புகாரிற்குHome office தந்த பதில்கள்.

நீங்கள் கூறிய விவகாரங்கள் உள்நாட்டு காரியதரிசிக்குத் தெரியும் கடந்த சில மாதங்களாக 21 தமிழர்களின் சடலங்கள் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதே சமயத்தில் இக்கொலைகள் சம்பந்தமாக 35 சிறிலங்கா இரகசிய படையினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


**ANTON WARAN & CO**

SOLICITORS AND COMMISSIONERS FOR OATHS

WE UNDERTAKE

** Civil Litigation * Commercial Litigation * Immigration * Personal Injuries*
** Conveyancing * Entertainment Law * Residential & Commercial*
** Police Station Advice & Assistance * Accident Claims * Matrimonial matters*
** Welfare benefits & Social security matters*

*For advice & Assistance on all Immigration matters*

Legal Aid

Legal Aid

PARTNERS

K.A.R Bulathwela LLB
S.K . Nageswaran LLB

**551 High Road Tottenham**
**London N17 6SB**
**Tel : 0181 808 2397**
**Fax : 0181 801 8818**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எதிராக குற்றவியல் வழக்கு தொடுப்பதாக பறைசாற்றியுள்ளார். இந்தச் சூழ்நிலையில் இலங்கைப் பிரஜைகள் அனைவரையும் பாதுகாப்பதற்கான எண்ணத்ததை இலங்கை அரசு தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதையிட்டு உள்நாட்டு காரியதரிசி திருப்பி அடைந்துள்ளார்.

2. சுவிற்சலாந்து நாட்டில் இருந்து திருப்பியனுப்பப்பட்டுள்ள அகதிகள் பலர் இலங்கையரசினால் சிறைப்படுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர் என்று கூறியதற்கு உள்நாட்டு காரியதசிரி (Home office) தந்த பதில்-

ஒரு சில சுவிற்சலாந்தில் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் அகதிகள் இலங்கை அரசினால் கிரமமான முறையில் விசாரிக்கப்படுவது பற்றி உள்நாட்டு காரியதரிசி அறிந்துள்ளார். யூ என் எச் சீ ஆர் குழுவினருக்கும் இது பற்றித் தெரியும். தகுந்த நடவடிக்கை அவர்களினால் எடுக்கப்பட்டுள்ளது.

3. Operation leap forward, Operation direct on fir e, Operation shake hands போன்ற விசாலமான போர்முறைகளினால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். அகதிகள் திருப்பியனுப்பப்பட்டாலும் அவர்களால் வடக்கு கிழக்குக்கு போக முடியாது எனச் சுட்டிக்காட்டியதற்கு Homeoffice தந்த பதில்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து போர் தொடங்கியது பற்றிய விபரம் உள்நாட்டுக் காரியதரிசிக்கும் தெரியும். அவர் அறிந்தவரை இப் போர் நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான தமிழர்கள் இம்மாகாணங்களுக்கு வெளியே அரசினாலோ சிங்கள மக்களினாலோ எந்தவிதமான பாதிப்புமின்றி சந்தோஷமாக வாழ்கின்றார்கள். இவ்வாறு ஏனைய பிரதேசங்களில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழும் நிலைமை தொடர்ந்து இருக்கும் வரை இலங்கையில் ஏனைய மாகாணங்கள் தமிழருக்கு பாதுகாப்பு அற்ற பிரதேசம் என்று உள்நாட்டுக் காரியதரிசியினால் ஏற்றுக்கொள்ள முடியாது.

4. அகதிகள் சம்பந்தமான வழக்குகளில் எழுதப்பட்ட சில முக்கிய வாதங்களுக்கு ஜெயச்சந்திரன் என்ற மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு வரும்வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காதிருக்குமாறு நாம் விடுத்த கோரிக்கைக்கு Home office தந்த பதில் பின்வருமாறு-

தங்களது கோரிக்கைக்கு இணங்க முடியாமல் இருக்கின்றது. ஒவ்வொரு அகதி விண்ணப்பமும் அகதிகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபை ஒப்பந்தப்படி விசாரிக்கப்படுகின்றன. ஒவ்வொருவரின் தனிப்பட்ட நிகழ்வுகளுக்கு அமையவே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. தீர்மானங்கள் எடுக்கப்பட முன் விண்ணப்பதாரிகளுக்கு சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்படுகின்றன. எம்மால் மறுக்கப்பட்டாலும் அவர்களுக்கு சுதந்திரமான மேன்முறையீட்டு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய சம்பந்தப்பட்டவரின் மேன்முறையீடு விசேட நடுவராலும் Tribunal இனாலும் விசாரிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் ரவிச்சந்திரனின் தீர்ப்பு வரை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க உள்நாட்டு காரியதரிசி தயாராகவில்லை.

5. அடுத்ததாக இப்போது இலங்கையில் எழுந்துள்ள சூழ்நிலை மாற்றங்களின் காரணமாக மீண்டும் ஒரு புதிய அகதி விண்ணப்பத்தை நாம் சமர்ப்பித்த போது உள்நாட்டுக் காரியதரிசியின் பதில் பின்வருமாறு-

அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய போர் நிலைமைக்குள்ளும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா அரசு சகல இன மக்களையும் அவர்களது குடியியல் அரசியல் மனித உரிமைகள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டிய திட சங்கற்பத்தை காட்டியுள்ளது. மேலும் அண்மைக்காலத்து பின்னடைவுகளையும் பொருட்படுத்தாது இலங்கையரசு பயங்கரவாதிகளின் பயமுறுத்தல்களும் ஒரு சமாதான தீர்வை ஏற்படுத்தியே தீருவோம் என்று திட சங்கற்பம் கொண்டுள்ளது. எனவே அண்மைக்காலத்தில் உள்ள போர்நிலைமை தங்களது புதிய விண்ணப்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்வதற்கான போதிய காரணங்கள் இருப்பதாக கொள்ளமுடியாது.

இவை போன்ற அண்மைக்காலத்தில் Home office இனால் எமக்குக் கிடைக்கும் பதில்களைப் பார்க்கும்போது இந்த நாட்டு அரசு முற்றும் முழுதாக இலங்கை அரசை ஆதரிப்பதையும் புலி இயக்கத்தினரையும் அகதி விண்ணப்பதாரிகளையும் வெறுத்து ஒதுக்குவதும் வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்த மனநிலைமையை மாற்றி அமைக்க இந்த நாட்டில் உள்ள சகல நலன்புரி சங்கங்களும் அவசரமாக ஒன்றுபட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது அவசியமாகும்.

லட்சுமி பதிப்பகம்
LUXMY PATHIPAKAM
உங்கள் அச்சமைப்புத் தேவைகளுக்கும் அழகுமிகு வடிவமைப்புகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
தொலைபேசி:
0181 924 8115

VEERA & CO
SOLICITORS
Experts in Immigration, welfare
Criminal, Matrimonial and Civil Litigation
MR SELLIAH VEERAVAGU LLB

47 Hounslow Avenue
Hounslow
Middlesex TW3 2DZ
TEL: 0181 898 2262
Fax: 0181 893 4808

24 fernlea Road
Mitchem
Surrey CR4 2HE
TEL: 0181 687 1154
Fax: 0181 687 1154

1083 Garratt Lane
Tooting
Tooting Lond. SW17 0LN
TEL: 0181 767 9572
Fax 0181 767 9572

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலண்டன் எட்மண்டனில் புதிய ஸ்தாபனம்
# SELLA TRAVEL ESTATES & ENTERPRISE

SELLA TRAVELS
SELLA SHIPPING
SELLA INSURANCE
SELLA AIR CARGO
LAMINATION
MORTGAGES
INSURANCE
HOUSE LETTING

SELLA

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பொருட்கள், சிலைகள்
எவர் சில்வர் சுவாமிப் படங்கள்
குத்துவிளக்கு, தாம்பாளங்கள்
பூசைச் சாமான்கள்நடன ஆபரணங்கள்
இமிட்டேசன் நகைகள்,வாத்தியக்கருவிகள்
வேட்டி,சேலை,சாரம்
என்பன மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

**227 , FORE STREET, EDMONTON,**
**LONDON N18 2TZ**
**TEL : 0181 803 8852**
**FAX : 0181 803 8795**

# NATHAN & CHELVA SOLICITORS

***YOUR SATISFACTION IS OUR HAPPINESS***

Contact us for PROMPT and PROPER service
in all LEGAL matters

We have the expertise in the following areas:-

* Criminal & Civil Litigation *Company winding-up & Bankruptcy Matters
* Matrimonial & Injunction Cases * Land Lord & Tenants Matters
* Residential & Commercial Conveyancing * Immigration & Political Asylum
* Licensing - Wills- Probate * Personal Injuries

Legal Aid

* Legal Aid Work*

Legal Aid

Partners :- K.Chelva Nayagam LLB ,
T. Sri Pathma Nathan (Former Advocate of Sri lanka)

**169 TOOTING HIGH STREET, LONDON SW17 0SY**
**TEL: 0181 672 1800 FAX: 0181 672 0105**
**DX : 58873 TOOTING SOUTH**

**ALSO BY APPOINTMENT ONLY AT 16, CARLTON TERRACE, UPTON PARK, LONDON E78LH**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூரியப்பூக்கள்

## சந்திரா ரவீந்திரன்



முன்கதைச்சுருக்கம்

ரகுபதி தரணா தம்பதியினர் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து லண்டனில் தஞ்சம் புகுந்து வாழ்க்கை நடாத்துபவர்கள். நாட்டு நிகழ்வுகளும் தாய்வீட்டு நிகழ்வுகளும் அவர்களை மிகுதியாய் பாதித்திருக்கும் நிலையில், தரணா இப்போ ஓர் குழந்தைக்குத் தாயாகியுள்ளாள்.

இதேவேளை, ஈழத்தின் வடபகுதியில் வாழ்ந்துவரும் தரணாவின் தங்கை சுகிர்தாவுக்கு வாழ்க்கை சோதனையாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அவளின் கணவர் குமார் கடமையில் இருந்த நேரத்தில் காணமால் போய்விட்டார்! அவர் சிங்களப்படையினரால் கைதுசெய்யப்பட்டோ அன்றேல் சுட்டுக் கொல்லப்பட்டோ இருக்கலாமென்ற நம்பிக் கையான தகவல்களின்பேரில் சுகிர்தா பைத்தியக்காரிபோல் நொந்து அலைகின்றாள்! சுகிர்தாவின் தங்கை வீணா தன் காதலையும் குடும்பத்தையும் துறந்து விடுதலைப்போரா ளிகளுடன் இணைந்துவிடுகின்றாள். துன்பச்சுபை ஒரு புறம், பொறுப்பற்ற தனம் ஒருபுறமாய் இவர்களின் தந்தை சுகவீனத்தில் படுக்கையாகிவிடுகிறார். !

தரணா- ரகுபதி, சுகிர்தா- குமார் அம்மா , அப்பா, வீணா இவர்களிடையே தொற்றி நிற்கும் வேலய்யா செந்தூர் ராஜ் அனிற்றா.....? உறவுகளும் பாசங்களும் பந்தங்களும் கலந்த இந்த வாழ்வுப் பேராட்டத்தின் தொடர்..........................

---

மாலை வெய்யிலின் செம்மை படர்ந்த கடற்பரப்பு! ஓய்வற்ற இரைச்சலுடன் பொங்கி நுரை தள்ளும் நீரலைகள்! இலேசான குளிரைத் தெளித்து காதுகளை உரசி அங்கலாய்க்கும் கடற்காற்று!

படகுநுனி தெரிகின்றதா என்ற ஆதங்கத்துடன் கடலையே விழித்துப் பார்த்திருக்கும் மனிதக்கண்கள்! ஒவ்வொருவர் மனங்களிலும் ஒவ்வோர் சிந்தனைகள். ஏக்கங்கள், அங்கலாய்ப்புக்கள் பிராத்தனைகள்!

கேரதீவிலுள்ள அந்தச் சிறிய படகுத்துறை முந்நூறுக்குமதிகமான ஜனங்களால் நிறைந்து வழிகிறது!

அமைதியான நீண்டவரிசை! கடலோரங்களில் ஆயுதமேந்திய இளைஞர்களின் கண்காணிப்பு! அவர்களது கண்கள் கடற்திசையில் மட்டுமல்ல நீண்டிருந்த ஜனவரிசையின் மீதும் அடிக்கடி மேய்ந்து செல்லும் !

அக்கரையிலிருந்து வரும் சனங்களை ஏற்றிச் செல்ல தனியார் பஸ்களும் சிறுவான்களுமாய் இறங்குதுறையின் ஒருபக்க ஓரம் இடைவெளியின்றி அடைபட்டுக்கிடக்கின்றது.

அறுவான்கள்! ஆணையிறவுப்பாதையை மறிச்சு வைச்சிருக்கின்றதாலை நாங்கள் எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலங்கப்படவேண்டிக் கிடக்கின்றது........? எல்லோரும் மனதிற்குள் சபித்துக்கொண்டிருக்கும் மோசமானதொரு உண்மையை சத்தமாய் போட்டுடைத்துக் கொண்டிருந்தாள் ஆற்றாமை மிக்க ஒரு வயதான மாது!

ஜனங்களின் நீளமான வரிசையில் திடீர் சலசலப்பு!

"படகு வருகுது........பாக்குகளை தூக்குங்கோ.........."

இரகசியமான ஆரவாரங்கள் அவசரங்கள், சில முண்டியடிப்புக்குகள்

சுகிர்தா படபடப்போடு வரிசையைவிட்டு சற்றேவிலகி தென்கடற்பரப்பை எட்டிப் பார்க்கின்றாள்.

" ஒரேயொரு சிறிய படகு ! இத்தனை ஜனங்களின் மத்தியில் ......இப்படகு எம்மாத்திரம்? அடையடையென்று அடைந்தாலும் இருபத்தைந்து பேருக்கு மேல் ஏறமுடியாத படகு! அவள் கிட்டத்தட்ட அறுபது எழுபது பேருக்கு இடைப்பட்ட நிரலில் நிற்கிறாள். இந்தப்படகிலை அவளுக்கு இடம்கிடைக்காது என்ற நிச்சயமான தீர்மானத்தில் சோர்வோடு மீண்டும் தன்னருகிலுள்ள வீதியோரக் கல்லில் குந்திக்கொள்கின்றாள்.

காற்றின் வேகத்தில் கூந்தலும் சேலையும் ஏட்டிக்குப் போட்டியாய் படபடத்து அலைகிறது. அவள் ஓரமாய் உட்கார்ந்திருப்பதை சாதகமாக்கிக்கொண்டு ஓரிருவர் அவள் நிரலைக் கடந்து மெதுவாய் முன்னேறுகின்றனர். இந்த சேஷ்டைத் தனத்தை விசாரித்துச் சண்டைக்குப் போகுமளவிற்கு அவள் மனோநிலையோ உடல்நிலையோ இல்லாததால் அவள் மனதை எங்கோ விட்டு விட்டு மௌனமாகவே இருக்கிறாள்.

வரிசையில் அவளுக்குப் பதிலாக அவளின் பயணப் பை மட்டும் கிடக்கிறது.

ஏதோவொரு வேகத்தில் சுகிர்தா தன்னந்தனியாக புறப்பட்டு வந்துவிட்டாள்!. கொழும்பில் நவரட்ணம் மாமா இருக்கிறரென்ற துணிச்சல்! அவர் ஏழெட்டு வருடங்களாய் ஊர்ப்பக்கம் தலைகாட்டாவிட்டாலும் உறவினர்களின் நிலைகளேதும் தெரிந்திராவிட்டாலும் என்னைக் கண்டதும் அம்மாவில் உள்ள அன்புக்காகவாவது ஏதோவொரு வழியில் நிச்சயம் உதவுவார் என்று அடிமனசில் ஒரு நம்பிக்கை!

"வேலைய்யா எத்தனை தடவை துணைக்குத் தானும் வருவதாகக் கேட்டார். சும்மாவே ஊர் வம்பளக்கின்றது. வேலைய்யா கொழும்புவரை துணைக்கு வந்து என் புருசனையும் உயிரோடு மீட்டுக்கொண்டாலும் கூட எங்கள் சந்தோஷத்தைக் கெடுக்கிறமாதிரி ...ஊர் புரளி கிளப்பத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை......"

அம்மா அப்பா அயலவர்கள் எல்லோரும் அவள் தனிமைப் பயணத்தைத் தடுத்தார்கள். கண்டித்தார்கள்.!

நிச்சயமானதொரு முடிவோடு திரும்பிவிடலாம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் வெறித்தனமாக மறுத்துப் பேசிவிட்டுப் புறப்பட்டு வந்துவிட்டாள்!

வேலைய்யா தன் ஜீவனத்திற்காக ஆங்காங்கே வட்டிக்குக் கொடுத்திருந்த மூலதனத்தின் ஒருபகுதியை அவசரமாக மீளத்திரட்டி இவளின் பயணச் செலவிற்கென கையில் கொடுத்துவிட்டிருந்தார்.

இந்த அன்பையும் தன்னலமற்ற உதவியையும் அவள் எப்படி நினைக்காமல் இருக்க முடியும்.?

ஜனங்களின் ஆரவாரம் மீளவும் வேகமாய் அதிகரிக்க நினைவுகளை ஒதுக்கிவிட்டு எழுந்து எட்டிப் பார்க்கின்றாள். தூரத்தில் வந்து கொண்டிருந்த படகு இப்போ தரைதட்டி யிருந்தது. அக்கரையிலிருந்து வரும் ஜனங்கள் மூட்டை முடிச்சுக்களுடன் இறங்குகின்றனர்.

வரிசையின் முன்பகுதியினருக்கு படகுப்பய ணத்திற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட அவர்கள் முண்டியடித்துக்கொண்டு படகில் தாவுகிறார்கள். ஜனங்களின் அவசரப்பாய்ச்சலில் படகு தரையில் மோதி அசைந்து தடமடிக்கின்றது.!

சூரியன் மறைந்து சற்றே நேரமாகிவிட்டதால் சூழல் இருள்பரவத் தொடங்கியிருந்தது. கடலேரி தாண்டத் தெரியும் கிழக்கு பூமியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்கூடல்களுக்கு அப்பாலிருந்து இலேசான துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்க ஆரம்பமாகியிருந்தது.! கடற்பரப்பின் மேலாக இடையிடையே சிவந்த நெருப்புப் பொறிகள் பறந்து போயின!

"இவ்வளவு நேரமும் பேசாமல் இருந்தவங்கள் இருக்கப்படாமல் தொடங்கீட்டாங்கள். இனித்தான் வலுகவனம். படகிலை ஏறினவை கடவுளைப் பிராத்தியுங்கோ" வரிசையின் முன்னணியிலிருந்து அதே பழைய வயதான குரலின் வேண்டுதல் நீண்டநேர அடுக்கெடுப்பின் பின் படகு புறப்பட்டுவிட்டது.

இனி அடுத்த படகு எப்போ? யோசனையின் மத்தியிலும் பசியிலும் தாகத்திலும் அவள் உடல் சோர்ந்து போகத் தொடங்கீற்று!

எத்தனை மாதங்களாகத் தொடரும் இந்தப் பசியும் தாகமும் சோர்வும்...."?

அவரின் சிதைந்து போன கைப்பையை கடலிலிருந்து மீனவர்கள் கண்டுபிடித்து எடுத்திருக்காவிட்டால்க் கூட ஓரளவு தெம்போடு இருந்திருப்பேனோ? அதுவா? இதுவா?....எது உண்மை ஆண்டவனே! அவர் உயிரோடு இல்லையென்று தெரிந்துவிட்டால்கூட அவரின் உயிரற்ற உடலை ஒரு தடவை பார்த்து உறுதிப்படுத்திவிட்டால் கூடப் பரவாயில்லையோ? இந்தப் பொட்டையும் மஞ்சள்கயிற்றையும் ஒரேமூச்சில் வீசி விட்டு ஜீவனின் தேவையின்றி சுகமாய் சுதந்திரமாய் கால்போன போக்கில் நடந்திடலாமோ?.........?

பிறகென்ன? அடுத்த படகும் வந்திட்டது சுருக்கா முன்னுக்கு நடவுங்கோ....." வரிசையின் முன்புறத்திலிருந்து மீண்டும் ஆரவாரக்குரல்கள். சுகிர்தா கலங்கிய கண்களை சேலைத்தலைப்பால் துடைத்துவிட்டு வரிசையின் முன்னே நகருகிறாள்.

கடலேரியின் ஓரமாக பைனாக்குலருடன் அமர்ந்திருக்கும் சீருடைப் போராளியிடம் பணத்தைக் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு படகில் ஏற எத்தனிக்கும்போது அக்கா என்றொருதடுமாற்றமான குரல்! அவள் ஏறாமலே நின்று திரும்பிப் பார்க்கிறாள். அதே பைனாக்குலர் போராளி நெற்றி சுருங்கிய கேள்விக்குறியுடக் இவளருகில் வருகிறான்.

நீங்கள்நிலவன்.....செல்வன்.................அவையின்லை....?

வினாவை முடிக்காமலே விடைதேடி அவளை உற்றுப்பார்க்கிறான்.

"ஓம் அவையளுக்கு அக்ககா........நான் .....நீர்.......?"

சட்டென்று புரண்டு பாயும் பழையய நினைவுகளில் அளைந்தவாறே அவனை ஆதுரத்தோடு பார்க்கின்றாள்.

" என்னை ஞாபகமில்லை? நிலவன் அண்ணையோட மூன்று வருஷம் சேவைசெய்தனானக்கா. ஒன்றாயிருந்து ஒரு கோப்பையிலை சாப்பிட்ட சீவனக்கா இது.....அவனின் கண்களைவிட மனம் அதிகமாகக் கலங்குவது புரிகின்றது!.

அவளுக்கு அவனை ஞாபகத்தில் கொண்டுவர முடியவில்லை!ஒன்றா இரண்டா எத்தனை ஜீவன்கள் அந்த வீட்டிற்கு வந்து உண்டு பசியாற்றினார்கள்? பானையில் மீதமில்லாவிட்டாலும் பக்குவமாய் குழைத்துக் குழைத்து எத்தனையோபேருக்கு அம்மா ஊட்டிவிட்டிருப்பா?

"செல்வன் கூட ரெண்டு கிழமைக்கு முதல் இவ்விடத்துக்கு அலுவலாய் வந்து போனவர். அக்கா அந்த றிசீட்டை ஒருக்கால் தாருங்கோ" கூறியவாறே அவள் கையில் கிடந்த சீட்டை அனுமதியின்றியே பெற்றுக்கொண்டு எதிர்பாராத விதமாய் பணத்தை மீளவும் அவள் கைகளுக்குள் சொருகிவிடுகிறான்.

திடுக்குற்றுப் போன சுகிர்தா அப்போதான் நிலையை உணர்ந்து கொண்டவளாய் தம்பி......? என்கிறாள். ஈனஸ்வுரத்தில்.

"பாவமக்கா கொடியபாவமக்கா இது! நீங்கள் சகல மரியாதையோட பயணம் செய்யவேண்டிய குடும்பம் நானிப்போ பற்றுச்சீட்டுத் தந்தால் என்னால் நிதானமாகக் கடமையைக் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரமுடியாமலிருக்கும்.
நான்......நான் உங்கள் வீட்டுச் சாப்பாட்டை அடிபட்டுச் சாப்பிட்ட சீவன் அக்கா! ஏறுங்கோ...படகு புறப்படப்போகுது அவள் ஏதேதோ பிதற்றுவது போன்ற தடுமாற்றத்துடன் அவள் படகில் ஏறுவதறகு உதவுகிறாள்.
பின்னால் வரிசை நீண்டு கிடக்கிறது. படகு புறப்படமுன்பே பனங்கூடல்களுக்கு அப்பாலிருந்து வரையறையின்றி ஷெல்கள் ஏவப்படத் தொடங்கியிருந்தன!
மேகத்தில் நட்சத்திரங்கள் பூத்து கடற்பரப்பில் வளர்பிறையின் மெல்லொளி பரவியிருக்கும்போது படகு புறப்படஆரம்பிக்கிறது. படகு நடுக்கடலுக்கு வரும்போது தூரத்தில் ஸனங்கள் பூச்சிகளாகத் தெரிய பைனாக்குலர் போராளி மனசிற்குள் விஸ்வரூபமாகியிருந்தான்!
அக்கரை அதிக தூரமில்லையென்று தோன்றியது!படகு மறுகரை தட்டியபோது முற்றாக இருள் கவிந்து கடற்காற்றின் குளிரும் அதிகமாகியிருந்தது. !
ஓரிரு குடிசைக்கடைகள் மட்டும் மங்கிய மண்ணெய் விளக்கொளியில் மௌனமான பரபரப்புடன் இயங்கிக்கொண்டிருக்கின்றன அவள் ஜனங்களோடுஜனங்களாய் தரையிறங்கி விட்டபோதும் மனசை இனம் புரியாததொரு பயமும் அழுகையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது!

முதல்தடவையாக அவள் மேற்கொள்ளும் தனிமைப் பயணம் அல்லவா இது! ஆபத்துக்களும் அச்சமும் மிகையாகும்போது ஜனங்கள் இயல்பாகவே ஒருவர்க்கொருவர் நெருங்கமாகிவிடுகின்றார்கள்! இதில் போலியற்ற பற்றுதலும் ஆதரவும் வந்துவிடுபிறது! ஷெல்வீச்சு எந்தநிமிடமும் இப்பகுதிக்குள் ஊடுருவலாம் என்ற பரபரப்பில் வீதியோரத்து வாகை மரத்தின் கீழ் நின்ற பயணிகள் பஸ் இல் அவசரம் அவசரமாய் எல்லோரும் எல்லோரும் ஏறத்தொடங்குகிறார்கள். ஈ நுழைய இடமில்லாத நெருக்கம்!
அச்சமும் பிரார்த்தனைகளும் நிறைந்த நீண்ட பயணம்!வானத்தில் தொடர்ந்து வட்டமிடும் போர் விமானங்களிற்கும் உலங்குவானூர்திக்கும் அகப்படாமல் கற்களும் முட்களும் நிறைந்த கரடுமுரடான பாதைகளில் ஆங்காங்கே தரித்துப் பதுங்கி பதுங்கிச் செல்லும் பரிதாபகரமான பயணம்.!

பஸ் இல் உள்ளவர்களும் இனம்புரியாததொரு ஒற்றுமையுணர்வும் ஜாதிமதபேதமற்ற மனிதநேய உணர்வுகளும் பிரவாகித்துக் கொண்டிருந்தது! நம்பிக்கையும் நம்பிக்கையற்றதுமான ஒரு பின்னணிச் சூழ்நிலையோடு வவுனியா வந்தடைந்தபோது மறுநாள் மதியமாகியிருந்தது.
இது என்ன கண்டிப்பெரகராவா இல்லை காலிமுகத்திடலா? இத்தனை சிங்களக் குரல்கள்! வவுனியா சிங்கள ராணுவமுகாம் பரப்பின் முன்பாக பெருவீதியின் ஓரமெங்கும் பதற்றம் நிறைந்த ஜனநெரிசல்! வீதியால் வரக்கூடாதது எதுவோ வந்துவிடுமென்ற உன்னிப்பான உசார்நிலையில் ஆயுதம் தாங்கியவர்கள் வெறிநாய்கள் போல மூசிமூசி விழித்துக்கொண்டு அங்குமிங்குமாய் அலைகின்றார்கள். இதுவொரு வேற்றுநாட்டின் நுழைவாயில் போல!
இதுவரை கண்டு வந்த சூழல் தலைகண்டால் சன்னம்பாயும்! ஆனால் இங்கு அந்தந்த நேர மனோ நிலைகளைப் பொறுத்து சன்னங்களும் பாயும் நிராயுதபாணியில் சன்னதங்களும் நிகழும்! கைக்குள் மெதுவாய் தாள்களைச் சொருகினால் சந்நிதியாகவும் மாறும்!

இன்னும் வரும்.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிச்சி

## –ஜீவன்–

அபிராமி அழவில்லை. அவள் அழக்கூடாது. இந்து மதத்தில் பிறந்த குலப்பெண்ணிற்கு எது பெருமையென அணிகலனானதோ அதை ஒரு மிருகம் என்ன பல மிருகங்கள் தொட்டு அழித்துவிட்டன. அபிராமி எனும் அந்த அந்திவயற்காட்டு செம்பருத்தி அழகிழந்து அந்திமணம் இழந்து உருவிழந்து உன்னதமானம் இழந்து கருவறையின் சொல்லொணாத் துன்பத்தை இருகைகளாலும் அணைத்தபடி..... அந்த அபிராமியின் உடல் அனைத்து உணர்வும் இழந்து விழுந்தது.

வரலாறு தன்னைப் பேணப் போராடிய எந்தக் கல்தோன்றாக் காலத்துக் கதையில் கண்டது இங்கும் நடந்துவிட்டது.

மதம் என்றோன் மறந்தும் மற்றவற்றை விட்டுவைக்க விரும்பவில்லை. அவன் காலத்திலேயே அவை மறக்கப்படவேண்டும் என்பது அவன் கருத்து. இனம் என்றோன் இயன்றளவு

SOORI SOLICITORS

உங்களின் சட்டம் சம்பந்தமான
சகல ஆலோசனைகளுக்கும்
தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு
கொள்ளவேண்டிய
சட்டத்தரணிகள்

Legal Aid

Criminal, Civil Matrimonial Litigation
Conveyancing Liquor Licencing
Will & Probate Police Station Advice
& AssistanceLegal Aid

சூரி சட்டத்தரணிகள்

**44 High Street**
**Colliers Wood**
**London SW19 2AB**
**Tel : 0181 544 9285**
**Fax : 0181 540 9237**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றவற்றை இளுக்கடித்தான். இயலாதவன் இறுமார்ப்பு என்பது அவனிற்குத் தெரியவில்லை.

முடிவு-
மதங்கள் பிரிந்தன. இனங்கள் பிரிந்தன. மதம் என்றவன் கொண்டான் மதம், மருண்டவன் கொண்டான் மானம். இனம் என்றவன் கொண்டான் இயலாமை. இயலாதவன் கொண்டான் இம் மண்ணின் யுத்தம்.
மண் கொண்டது உடல்கள்- இந்த மண்ணிற்காக சரிந்தன மருது வேங்கைகள்.

அபிராமி மட்டும் விதிவிலக்கா என்ன? அவளது ஒவ்வொரு அணுவும் இயலாமையின் விளிம்பைக் காட்டின. அவளது நினைவுகள் மட்டுமே ஆட்சி பீடத்தில் இருந்தன. ஆனால் அவற்றால் அபிராமியை சுய நினைவிற்குக் கொண்டு வர முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் அவற்றிற்குத் தெரிகின்றது. அபிராமியை ஏதோவொரு சக்தி காவிச் செல்கின்றது.

நிலவுப்பெண்- அவளிற்கு மட்டும் ஏன் இத்தனை அழகு. அவளிற்குத் தெரியும் அவளின் உதவி. இன்று இந்த அபிராமிக்குத் தேவை என்று .
தன்னுள் கிளர்ந்த தென்றலால் அபிராமியை அணைக்கிறாள். அபிராமி தன் தேக அணுக்களை உணரத் தொடங்கினாள். கண்களை மெல்ல விழித்தாள். அபிராமி விழி இமைகள் கூட தமது எதிர்ப்பைத் தெரிவித்தன.
தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்த உருவத்தை அவளால் முழுமையாக வரைய முடியவில்லை. அவளையறியுமுன்பே அவள் கைகள் கூப்பின. கண்ணீர் அவள் காதோரங்களில் தேங்கி வழிந்தன. கண்களை இறுக மூடியபடி தன் உதடுகளை அசைத்தாள்.
''என்ன விட்டிடுங்க......''
''என்ன விட்டிடுங்க.........''
அடர்ந்த மரங்களின் நிழலில் நின்ற உருவம் அபிராமியருகே வந்தது. தனது முதுகுப்புறம் இருந்த துணிப்பையை இலேசாக மண்ணில் வைத்தது. அதற்குள் இருந்த தேங்காய்ச் சிரட்டையை தட்டிச் சுத்தமாக்கிய பின் தான் கொணர்ந்த குவளை நீரை அதற்குள் மெதுவாக ஊற்றியது. அபிராமியை சுற்றி வந்து அவளது தலையருகே மெதுவாக அமர்ந்தது. தன் இடக்கையினால் அவளது தலையை ஆதரவாகத் தூக்கித் தண்ணீரை அவதானத்துடன் பருகியது.
தன் தலையை கைகள் தொட்டதும் சப்த நாடிகளும் ஒடுங்கியவள் அவற்றின் பக்குவத்தை உணர்ந்து மெதுவாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைத் திறந்தாள். முதன் முறையாக அந்த உருவத்தை உற்றுப் பார்த்தபடி அவன் அளித்த தண்ணீரை அருமருந்தெனப் பருகினாள்.
ஓரளவு தென்புடன் எழ அவள் எழுந்து இருக்க ஏதுவாக அவன் உதவி செய்தான். அவளின் கலைந்த கூந்தலை ஒருக்கணித்துத் தனக்குத் தெரிந்த முறையில் ஐடை போட்டான். அதைத் தன் கைகளால் தடவியுணர்ந்த பின் அவனையவள் திரும்பிப்பார்த்தாள். சூழ்நிலை வேறாக இருந்ததிருந்தால் அபிராமியின் கண்களில் குறுகுறுப்புத் தெரிந்திருக்கும். ஆனால் அவை தான் பிடுங்கியெறியப்பட்டு பல நாழியாகின்றதே.
அவனிடமிருந்து பார்வையை நீக்கி
'' உங்கட பெயர் என்ன?'' என்றாள்
''ஹரி'' என்றான் ஆதரவான குரலில்
இருவரிடையே மௌனம் நீளத் தொடங்கியது. அந்தஇரவு நேரக் கோடைகாலத் தென்றலை அந்த அடர்ந்த காட்டின் தளிர்கள்மேலும் குளிர்மையாக்கியது. ஹரியிடமோ அணிவதற்கு வேறு இருக்கவில்லை. அபிராமியை நோக்கினான்.
''குளிருதா? ''
''ஹம்.......''
மீண்டும் சில வினாடிகள் மௌனம். ஹரி மௌனத்தைக் கலைத்தான்.
''நான் அனாதையாயிட்டன்'' கண்கள் கலங்கினான் ஹரி.
அவனைத் திரும்பிப் பார்த்தவள் கண்களிலும் நீர் நிரம்பியது.
''நானும் தான்.........'' என்றவள்தன் முழங்கால்களுக்கு இடையில் தலையை வைத்து விசும்பினாள்.
அவள்தலையை ஹரி ஆதரவாக வருடியபடி தனது கண்ணீர்த்துளிகள் தெளித்துவிடாதபடி வலதுகையால் இமைகளை இறுகப் பிடித்துக் கொண்டான்.
பழையவை ஒன்றும் மீளப்போவதில்லை என்ற நிலையில் கண்களை மீண்டும் விளித்து அருகிருந்த துணிப்பையை இழுத்தான். அதனுள் இருந்த சிறிய துண்டொன்றை வெளியே எடுத்து அதன் மேல் குவளைநீரை ஊற்றி நனைத்தான். அதனை உள்ளங்கையில் வைத்துப் பிளிந்தவாறே
''எழும்பம்மா'' என்றான்.
மெதுவாக தலையை நிமிர்த்தியவளைப் பார்த்து ''நகக்காயங்களை துடைச்சிடறது நல்லது'' என்றபடி அவளது நெற்றி மேலுதடு கையில் இருந்த காயங்களை அவளைத் துன்பப்படுத்தா வண்ணம் ஒவ்வொன்றாகத்துடைக்கத் தொடங்கினான். அவனது பரிவு மனதை சிறிதாக ஆறுதல் படுத்த கண்களை துடைத்தபடி எப்படி என்னைக் கண்டனீங்கள் என்று கேட்டாள்.
நிமிர்ந்தவன் கண்களில் எண்ணற்ற உணர்ச்சிகள்.
'' வீட்டில எல்லாரையும் சுற்றி வளைச்சவங்கள் கோழிக்கூட்டுக்குள்ள இருந்த என்னைக் கவனிக்கேல. அவன்கள் செய்த அ...கோரத்தைப் பார்த்து அவங்களக் கொல்ல வேணுமென்ற வெறி. ஆனா என்னால அவங்கள் எல்லாரையும் கொல்ல முடியாதே. அதனால ஓடினன். அவங்களைக் கொல்ல சந்தர்ப்பம் கிடைக்காதா என ஓடினன் . காட்டுப் பத்தைக்குள்ள ஒருவன் ஏதோ ஒண்ணை இழுத்துக்கொண்ணுபோவது தெரிஞ்சது. ஊரெல்லாம் கேக்கக்கூடிய அந்த வெடிச்சத்தங்களில நான் வந்த அரவம் அவனுக்குக் கேட்கல்ல. ஆமிக்காரன்கள் தனிய வரமாட்டாங்களோ இங்கே ஒருவன் எண்டால் மற்றவர்கள் எங்க எனப் பாத்தன். ஆனால் ஒருவனையும் காணேல.நல்லா மாட்டிடேனோ எனக் கூட யோசிச்சன் ஆனால் அவன் தண்ட உடுப்புக்களைக் கழட்டிறதைக் கண்டதும் ஏதோ கற்பழிப்பு நடக்கப்போவது எண்டு எனக்குப் பொறிதட்டிச்சு நான் நினைச்சது பிழைக்கேல. எனக்கிருந்த வெறியில.......அவன அவனிண்ட துவக்குக் கத்தியாலேயே குத்திக் கிழிச்சிட்டன். அவனுக்கு முகமே இல்லாமல் பண்ணீட்டன். அவனினி எழும்பமாட்டான். கடைசிவரையும் எழும்பமாட்டான்..........
ஹரியின் குரல் இறுகியது. அவனது கோபம் கண்ணீராகக் கண்களில் இருந்து இறங்கியது. முழங்காலிட்டு நிலத்தையே பார்த்தவனின் கண்கள் அபிராமியை நிமிர்ந்து பார்த்தன. ஏதோவொரு துணிவில உங்களையும் தூக்கிப்போட்டுக் கொண்டு இந்தக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள்ள வந்திட்டன். உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே நீங்கள் மயங்கிக் கிடந்தது தெரிஞ்சது. இன்னொருவன் கண்ணிற்கு உங்களை விட்டுவைக்க விரும்பலே. இங்க வந்ததும் உங்கள இங்க கிடத்தீட்டு ஊருக்குள்ளே போய் தண்ணி கொணந்தன். நான் அங்க போகேல்ல ஒருத்தனும் இல்லை. எல்லாற்ற வெறியாட்டமும் முடிஞ்சு போயிட்டாங்கள்.

என்றபடி தன் கையில் இருந்த ஈரத்துணியை அபிராமியிடம் கொடுத்து

''உங்கட நெஞ்சில எல்லாம் காயம். இந்த ஈரத்துணியால இப்பவே துடைச்சிடுங்கோ'' என்று சொன்னவனது கண்களை ஊருடுவினாள் அபிராமி. அவளது குழப்பத்தை அறிந்த ஹரி ''உங்களை அங்கே கண்டபோது எல்லா இடமும் காயமிருந்தது''

என்று சொல்லிவிட்டு எழுந்து முதுகைக்காட்டிய வண்ணம் நடந்து அந்த இருட்டினுள் சென்று மறைந்தான்.

இந்த அபிராமிக்கு கடைசி ஒரு தடவையாவது மானம் போகாமல் ஹரி காப்பாற்றிவிட்டான். என நினைத்தபடி தன் மேனியைப் போர்த்திக் கிடந்த துணிகளை விலக்கிப் பார்த்தாள். இரத்தக் கறைகளும், நகக் கீறல்களும் அவளது தெய்வீக அழகை மாசுபடுத்தியிருந்தது. ஹரி தந்த துணியை தண்ணீர் ஊற்றி நனைத்துப் பிழிந்த பின் காயங்களை துலடக்கத் தொடங்கினாள்.

ஒன்று இரண்டாண்டுகள் அல்ல. அவள் ஜனனித்தது தொட்டு இருபத்தொரு வருடங்களாக அவள் வாழ்ந்த யுத்த பூமி அபிராமியை பல மணிநேரங்களிற்கு முன்பு நடந்த கன்னியாதானத்தை அவள் மனதினுள் சமாதி அடையச் செய்தது.

பெற்றோர் இருபுறமிருக்க, உதிரமும் உறவுகளும் சூழவிருந்து அக்னியை சாட்சியாக வைத்து செய்யப்படவேண்டிய கன்னியா தானத்தை காமுகர்கள் கழுவேற்றி வைத்துவிட்டார்களே!

சிப்பி உடைத்தாலே முத்து இருப்பது தெரியும். உடைந்த இந்த முத்துப்பேச்சிக்கு அவள் வாழ்ந்த மண் அளித்த மனவுறுதியே நான் சொல்லும் முத்து. அபிராமி எனும் சிப்பியை உடைத்து அவளது உறுதியை சோதிப்பதில் விதி தேவதைக்குத் தான் என்ன இலாபமோ?

தன் அழகில் ஏற்பட்ட காயங்களை ரணம் குறையம் வண்ணம் ஒற்றியபின் தன்மேல் இருந்த துணிகளால் இயன்றவரை மறைத்துக்கொண்டாள்.

எவ்வளவு நேரம். ஹரி எங்க? அட பெயர் ஞாபகத்தில் இருக்குதே? அப்போது என்ன சொன்னவர்.... இல்ல அப்போத என்ன சொன்னவன்.....

மனதினுள் ஹரியை வெகு இயல்பாகப் பேசிப்பார்த்தாள். மனதிற்குள் ஒரு திருப்தி சிறகடித்து அதன் உணர்வை அபிராமியினுள் பரப்பியது.

விடமாட்டீங்களே! எவனாவது பரிவாகக் கதைச்சா ஆளை மடக்கீட்டன் எண்டு கற்பனை பண்ணீடுவீங்களே!

அபிராமி தன் உள்ளுணர்வை ஏளனம் பண்ணினாள்.

அபிராமியின் எண்ணங்கள் பழையவை மேல் மண்ணிட்டு விதை விதைத்து அரும்பு காண அங்கலாய்க்கின்றது. கசங்கிய பூவின் மகரந்த மணிகள் கூட அதன் மரத்திற்கு விதைகளை உண்டாக்குகிறதே! ஆகவே அபிராமியின் எண்ணங்களில் வியப்பில்லை!

நானோ முகரப்பட்டவள். இனி என்னென்ன நடக்கப்போகுதோ? சொந்தம் என்றிருந்தது அப்பா அம்மா விட்டிட்டுப் போன தம்பி......

சுருதியில் கவரப்பட்ட தெம்மாங்கு காலையில் பலியான தம்பியின் நினைவு வர சுருதியில் குலைந்தாள். ஆ.....இறைவன் என்பவன் கண்ணை மூடிக் கடமை செய்யும் கலி அவதாரமா? அப்படியானால் அவன் ஏன் புராணங்கள் கூறியதன்படி தன்னை இங்கு உணர்த்தவில்லை.

இறுகிப்போன உணர்வுகளினுள் மேலும்

உயிரோட்டம் இருக்கக் கூடாதென்ற முடிவில் சிந்தனைகளை முறித்து ஹரி சென்று நேரமிருக்கிறதே என நினைத்தவாறு அந்தக் காரிருளை நிலவின் முகட்டின் மேலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்தாள்.
மிக நலிந்த அந்த சருகு இலைகளின் சரசரத்த சத்தம் அபிராமியின் கண்களை கூர்மை அடையச் செய்தது.
அது என்ன.........
சருகுகளின் மேல் அந்தப் பதினைந்தடி நீள மலைப்பாம்பு நிலவொளியில் நெளிந்தது. அதன் வளவளப்பான தோலும் மிக ஆறுதலான அதன் அசைவும் அபிராமியை மண்ணில் இருந்து எழச் செய்தது.

ஐயோ ........! ஹரி எங்கே? இப்ப என்ன செய்யிறது?
சில்லிட்ட உணர்வுகளுடன் எழுந்தவள் மலைப்பாம்பின் அசைவுகள் தன்னை நோக்கி அமைவதைக் கண்டு தன் கைகளால் தன்னைப் போர்த்தியிருந்த துணிகளை இறுகிப் பிடித்த வண்ணம் அதன் பாதையில் இருந்து விலகி எட்ட நின்று மருட்சியுடன் பார்த்தாள்.
ஹரியின் துணிப்பையின் மேலேறி .....ஊர்ந்து ....மீண்டும் இருண்ட அந்தக் காட்டினுள் போகும் அதன் உடலைப் பார்த்து அபிராமியின் உள்ளங்கால்கள் கூசின.
''என்ன நடந்தது ? கரிய இருளினூடு ஹரி நடந்து வந்தான்.
சத்தம் கேட்டுத் திரும்பியவள் ஹரியின் முகம் தெரிந்ததும் ஓடிச்சென்று அவனின் அகன்ற முதுகின் பின்னே ஒளிந்துகொள்டாள். அப்படியும் சிலிர்ப்பு அடங்கப்பெறாதவளாய் அவனின் உறுதியான வலதுகையை தன் கைகளால் இறுக்கியபடி
''இந்த இடத்தை விட்டுக் கூட்டிட்டுப் போ ஹரி எனக்குப் பயமாக இருக்குது என்றாள் அபிராமி.
''அபிராமி அது சாதாரண மலைப்பாம்பு நாங்கள் நிற்கிறது நடுக்காடு. இதெல்லாம் சகஜம். என்று சொன்னபடி நிலவொளியில் அவளை அமர வைத்தான்.
பாம்பு சென்ற பாதையை ஒரு முறை பார்த்துவிட்டு ஹரி காட்டிய இடத்தில் அமர்ந்தாள்.

ஹரியையும் இழுத்துத் தன்னருகே இருத்திக் கொண்டாள்.
'' என்னைத் தனிய விட்டிட்டு எங்கேயும் போயிடாதே ஹரி''

''ஹம் எவ்வளவு நேரம் என்னோடேயே இருக்க யோசனை''
என்னைக் காணேல எனத் தேட ஒருத்தரும் இல்லை. யாரையும் பார்க்க வேணும் என்ற யோசனையும் இல்லை அதனால உன்னோட இருக்கிறதில ஆட்சேபனையும் இல்லை
அபிராமியின் எழுந்தமான பதில் ஹரியை திகைக்க வைத்ததாகத் தெரியவில்லை.
இதோ பார் அபி! விடிஞ்சதும் எனக்கென்று போக ஒரு இடமிருக்கு. உன்ன ஊர்ச்சனங்களோட சேர்த்திட்டு நான் போயிடுவன். என்னால செய்யப்படவேண்டிய சில கடமைகள் இருக்கு. அதனால சிறு பிள்ளைத் தனமாக என்னோடேயே இருக்க வேணும் எண்டு சொல்லிறதில அர்த்தமில்லை. விடியுமட்டும் உனக்கு நான் காவல். பிறகு நீ தான் உனக்குக் காவல் புரியுதா?
ஹரி தன் பெயரை அழைத்த விதம் அபிராமிக்குப் பிடித்துக்கொண்டது.
ஓகோ!... உங்களிற்கு மட்டும் போறதிற்கு ஒரு இடமிருக்கோ ஏன்? நான் அங்க வர ஏலாதோ? என்னைத் தனிய விட்டிட்டுப் போறதெண்டா இப்பவே போறது தானே. விடியுமட்டும் எனக்கொரு காவலும் தேவையில்லை. என்னட்ட இழக்கிறதிற்கும் ஒன்றும் இல்ல.

அபிராமி இறுதியாகக் கூறியது ஹரியின் நெஞ்சில் எங்கோ வலித்தது. அபிராமி நிறுத்தவில்லை.
நீ என்ன அங்க அவன்கள் கையில விட்டிடாமல் வந்ததிற்கு உன்னை என்றைக்கும் நினைப்பன். ஆனால் எங்க போக வேணும் என்றத நான் தான் முடிவு செய்யிறது. அதனால அளவுக்கதிகமாக என் மேல் உரிமையை எடுத்துக் கொள்ளாதே ஹரி
அபிராமியையே பார்த்துக் கொண்டிருந்த ஹரி அவள் கண்களினுள் ஒரு முறை ஊருடுவினான். அதிகாலையில் அவன் கண்டெடுத்த சிதைந்த பூவா இந்த அபிராமி இல்லை.
அவள் உறுதியில் ஒரு தெளிவு. உருவத்தில் ஏதோ ஒரு கவர்ச்சி
நான் கவிஞன் அல்ல. ஆனால் இந்த அபிராமி எனும் கிராமத்துப் பெண்ணில் உள்ள அழகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணிக்க என் இனிய தமிழ் சிறந்தது. நீங்கள் எதை ஒரு பெண்ணில் அழகு என்பீர்களோ அதை இந்த அபிராமி தனதென்பாள். காரணம் அந்த அழகையெல்லாம் சிறைகொண்ட ஆமணங்கே இந்த அபிராமி.

எழு மூன்று வயதினிலே - இவளது
பிறையவள் நெற்றியும் பின்புறக் கூந்தலும்
எழுந்த நாசியும், அன்றலர்ந்த மலர் இதழ்களும்
திரண்ட கனியென கன்னமும்
ஆரமிட்ட கழுத்தும் அழகென இரு மார்பும்
இவை தாங்கி ஒரு மெல்லிடையும்
அனைத்தும் நான் கண்டேன் நான் கண்டேன்
இந்தப் பெண்ணில் இந்த அபிராமியில்.

ஏதாவது சொல்லேன் ....ஏய்.......ஹரி....ஹ....ரி அபிராமியின் அழைப்பால் ஹரி தன் நிஷ்டையைக் கலைத்தான்.

தனக்குள் ஏதோவொன்றை ஹரி ரசிக்கின்றான் என்பதை அபிராமி கண்டுகொண்டாள். அதுவும் தனது கண்களை ஹரி நிச்சயம் ரசிக்கின்றான். உள்ளுணர்வெல்லாம் புது நரம்புகளை

மீட்டுவது போல் உணரத் தொடங்கினாள். ஆனால் அவற்றை வெளிக்காட்டாமல் மறைக்கச் சிரமப்பட்டாள் அபிராமி.

'' என்ன...? '' குறுகுறுப்பு முகத்தில் இழையோடியது அபிராமிக்கு.

'' உனக்குப் பசியாயிருக்கும். அதனால இந்த மாம்பழத்தைச் சாப்பிடம்மா..''

தன்கையில் வைத்திருந்த கனியை அவளிடம் கொடுத்தான்.

கண்கள் அசதியில் தளரவே எழுந்து சென்று துணிப்பையையம் தண்ணீர்க்குவளையையும் கொணர்ந்தான்.

மீண்டும் அபிராமியருகே இருந்தவன் குவளையில் இருந்த தண்ணீலை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தவளை

மிடறுகளுடன் பருகினான். அளவுக்கதிகமாகவே பருகினான். அபிராமிக்கும் சிறிது தண்ணீரை சேமித்துத் திரும்பியவன் தன்னையே கவனியாதவன் போல் குவளையை மண்ணில் வைத்துவிட்டு துணிப்பையை இலாவகமாக உருட்டி தலையணையாக வைத்து அதன்மேல் தன் அவயவங்களை ஓய்விற்குக் கொணர்ந்தான்.

தன்னிடம் தரப்பட்ட மாங்கனியை உள்ளங்கையில் வைத்து இரு கைகளாலும் அணைத்தபடி இருந்தவள் ஹரி குவளையில் இருந்த தண்ணீரை விடாமல் அருந்துவதைக் கண்டதும் நாள் முழுவதும் அவன் பட்டினி என்பதை உணர்ந்து கொண்டாள்.

''ஹரி...''

'' ஹ்.........ம்''

'' எழுந்திரு ''

''என்னத்துக்கு ''

''நீ ஏதாவது சாப்பிட்டியா''

''ஹ்ம்.....ம்.....புட்டு , மிளகாய்ப் பொரியல், கருவாட்டுக் குழம்பு, செமத்தியாய்ப் புடிச்சிட்டன். நோக்கு ஒரு கனி தான்

ஆத்துல இருந்து அப்படியே
கொணர்ந்துட்டேன்''

''ஹரிப்....ய் ''அபிராமி கிள்ளினாள்.

''ஏய், கிள்ளாதே''

''இப்ப நீ ஒழுங்கா பதில்
சொல்லல.......''கோபிப்பதிலும் அவளிற்கு ஒரு தனியழகு இருந்தது.

எழுந்து உட்கார்ந்தான். ஹரி.

'' இதோ பாரம்மா அபிராமி
எனக்கில்லாமல் கடைசிவரையும் எனக்கு
இந்த பழத்தைக்
கொண்டந்திருக்கமாட்டன். ஏற்கனவே நான் சாப்பிட்டபடியால தான் உனக்கு இந்தப் பழமாவது மிஞ்சினது. இதுக்குப் பிறகும் ஏதும் தொல்லை பண்ணினே

இருட்டெண்டும் பாராம இந்த இடத்த
விட்டு ஓடிடுவேன்.''ஹரி புறமுதுகைக்
காட்டியபடி மீண்டும் படுத்துக்
கொண்டான்.

ஹரிக்குத் தெரியாமல் அவனிற்குக் கேலி காண்பித்தபடி இதழை பழச்சாறு நினைக்க மாங்கனியைக் கடித்தாள்.

விட்டதை உணர்ந்தான். நேற்றைய
நினைவெல்லாம் பழவையாக
காலை........கண் இமைகளை இளவெப்பம் தாக்க கண்விழித்தவன் நன்றாக விடிந்து அபிராமியின் நினைவு வரப்பெற்றவன். அவள் எங்கே என நினைத்தவாறு எழுந்து உட்கார முயன்றான். எழத் தலையை உயர்த்தியவன் தன்னையணைத்தவாறு அபிராமி படுத்திருப்பதை கண்டதும் மீண்டும


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுங்காமல் படுத்துக் கொண்டான்.
இவள் ஏன் என்னை அணைத்துக் கொண்டு படுத்திருக்கிறாள். எண்ணங்கள் சிறகடிக்க மனதினுள் சந்தோஷம். சிறிது யோசித்தான். பண்பு மேலோங்கவே இணைத்திருந்த கையை மெதுவாக அகற்றினான்.
மென்மையான விரல்களும் அதன் இளம் பஞ்சுபோன்ற மிதமான வளைவுகளும் ஹரியைத்தீண்ட இவன் அறியாமலேயே இரத்த அணுக்கள் வேகமாக அந்த இன்பத்தைப் பரவின.
மெதுவாக எழுந்து நடந்தவன், காலைத் தென்றல் இதமாக வருட குழந்தைபோல் தூங்கிக்கொண்டிருந்தவளை நிழல்படு தூரத்தில் நின்ற வண்ணம் ரசித்துத் தன் மெய் மறந்தான்.
கிராமத்துக் கள்ளியே!
தாமரை தான் இங்கு தன் இதழ் விரித்ததோ என மயங்குகிறேன்.-நான் உன் பாதங்களின் நிறத்தைச் சொல்கிறேன்.
கிளி கொத்தாத அத்திப்பழங்கள்-நான் உன் அழகான கூந்தலைச் சொல்கின்றேன்.
அழகு காட்டும் சிறு ரேகா இதழ்கள்-நான் என் அழகான இதழ்களைச் சொல்கிறேன் பெண்ணே!
என்னையேன் மீண்டும் மீண்டும் கவிபாட வைக்கின்றாய்?
வேண்டாம்! வேண்டாம்!! நீ சொல்லாதே!! நானே உரைக்கின்றேன் என் கவிதைகளிற்கு பெண்மையைத் தருபவள் நீ தானே.நீண்ட இரவின் பின் இலைகளின் சரசரப்பும் நாலைகளின் சத்தமும் இவற்றையெல்லாம் அனுபவித்துப் பின் எங்கே டிங்கே என இலை இடுக்குகளினூடு பெருமை தரும் மண்ணைத் தேடும் கதிரவனொளியும் அதன் இன்பமான அணைப்பும் அபிராமியை மெது மெதுவாக உசுப்பின.
கைகளைப் பரப்பி மண்ணில் அங்குமிங்கும் அலைந்தவள் நடந்துபோன சம்பவங்களும இறந்துபோன இரவும் நினைவுக்கு வர கண்களை விழித்து உறங்கிய நாணற்புல் போல் எழுந்து கொண்டாள். ஹரி......இவன் என்ன செய்யிறான்.....நன்றாக விடிஞ்சுட்டுதே..............
ஒன்றிற்கொன்று தொடர்பில்லாமல் நினைவுகளும் உணர்வுகளும் தம்மை நிலைநிறுத்த முயல தன் முன் நிழலாக நிற்கும் ஹரியை சிறிது வியப்புடன் இமைகளை உயர்த்திப் பார்த்தாள்.
செருமியபடி தன்னை ஹரிக்கு உணர்த்தியவள் முழங்கால்களை மடித்துப் பின் இருகைகளாலும் அணைத்துப் பிடித்துக்கொண்டாள்.
என்ன? என்னப் பாத்தா பாவமா இருக்கா? என்னக் கெடுத்துட்டாங்களே என நினைச்சுப் பாவமா இருக்கா? ஊருக்குத் தெரிஞ்சா என்ன நடக்குமோ என நினைச்சு பாவமா இருக்கா? ஹரியின் கண்களினுள் தன் பார்வையால் ஆராய்ந்தாள் அபிராமி.

''இல்லை பாவமா இல்லை பதிலுக்கு உன்னை ரெம்பப் பிடிச்சிருக்கு. உன்னப் பிடிச்சிருக்கு. உன் பேச்சு பிடிச்சிருக்கு. உன் தைரியம் பிடிச்சிருக்கு. இந்த....இந்தச் சங்கிலியிலுள்ள உன் பெயரு பிடிச்சிருக்கு. உன்னக் கல்யாணம் பண்ணிக்கிற அளவு உன்ன எனக்குப் பிடிச்சிருக்கு''
அபிராமியை நேற்றுக் கண்டபோது அவள் கழுத்திலிருந்து தாவணியில் அறுந்து தொங்கிய அந்த மெல்லிய அழை போன்ற சங்கிலியையும் அதில் கோர்த்திருந்த அவள் பெயரையும் தன்னிடமிருந்து எடுத்துக் காட்டினான்.

இன்னும் வரும்..........

அகதி அகதி பிரசுரத்தினரால் வெளியிடப்படுகின்றது. ஆக்கங்களில்வரும் கருத்துக்கள் ஆக்கதாரர்களையே சார்ந்தவையாகும். எனினும் ஆக்கங்களை சுருக்கவோ அல்லது திருத்தவோ அகதி பிரசுரக்குழுவுக்கு உரிமை உண்டு. அகதியில் வரும் ஆக்கங்கள் வடிவமைப்புகள் எந்தவகையிலும் பிரதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
அகதி லட்சுமி பதிப்பகத்தாரால் வடிவமைக்கப்பட்டு நர்மதா பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு 1995 கார்த்திகை மாதம் அகதி பிரசுரத்தாரால் வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARKANDAN & CO

## *SOLICITORS*

*Empowered to Administer Oaths*

TAMIL HOUSE
720, ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

**M. MARKANDAN LLB**

* ALL ASPECT OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS.
* ALL TYPES OF CONVEYANCING * LITIGATION * ALL COURTS CIVIL/ CRIMINAL
* LANDLORDS/ TENANT MATTERS * MATRIMONIAL * POLICE STATION ADVICE
* ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS * FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP

**TEL : 0181 514 8188**

**FAX : 0181 514 8303**

# SRIKANTH & CO

## SOLICITORS

## ADMINISTRATORS OF OATHS

FIRST FLOOR, HIGH ROAD, WEMBLEY, MIDDEX HA0 2AF
(Entrance on Thurlow Gardens)

Tel : 0181- 795 0648 (5Lines) Sri : 0831 195979 (Mobile)

**LEGAL AID WORK UNDERTAKEN**

**Available Late evenings-weekends by prior appointment**

**WE UNDERTAKE**

*** Civil & Criminal Litigation * Employment Matters** Landlord & Tenant Matters**
*** Immigration Matters* Welfare Benefits & Social Security Matters***
***Conveyancing :- Commercial & Residential* * Matrimonial Matters & Injunction***
*** Traffic Offences * Personal Injury* *Police Station Representation***

*We have staff who can converse in the following Languages:-*

**Bengali * French * Hindi * Malay * Nepali * Punjabi * Sinhala * Tamil & Urdu*

*we can also arrange interpreters in other foreign languages*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI KANNAN STORES

## ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்

249-251 Fore Street, Edmonton, London N18
Tel : 0181 884 4979 Fax : 0181 345 6317

உடன் ஆடு கோழி
இறைச்சிகள் இங்கு
கிடைக்கும்

உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கில, வீடியோ,
ஓடியோக்கள் மற்றும்
இலங்கையிலிருந்து
தருவிக்கப்பட்ட உணவுப்
பண்டங்கள் உடன் மரக்கறி
வகைகள் ஆகியவற்றை
மலிவு விலையில் பெறலாம்

# ADCHAY VIHAAR

*TANDOORI RESTAURENT &*

*SWEET CENTRE*

**NO 80 SOUTH ROAD, SOUTHHALL MIDDLESEX UB1**

**TEL : 0181 574 9209**

*SouthIndians & Srilankans Cusion*

திருமண வைபவங்கள்
பிறந்தநாள் வைபவங்கள்
ஆகியவற்றுக்கான
ஓடர்கள் ஏற்றுக்
கொள்ளப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org